# RUKMANI—KRISHNA

A DRAMA IN TAMIL

4506.



ஸ்ரீராம தபோவன
வாசக சாலை.

920

BY

**M. SUBRAMANIAN, B.E.,**

( Electrical Inspector, Government of Madras. )

AUTHOR OF

**Manmatha-Vijayam,**
**Santhanakrishnan, Periannan's Tea-party,**
**Submunsif's promotion etc.**

Printed at Giri Press, Triplicane, Madras.

1938

**All Rights Reserved. ]** **[ Price Annas 8.**

# AN ACTOR HONOURED.

The Hon. Sir K. V. Reddi, Law member to the Government of Madras, presided over a performance of the Coimbatore Music and Dramatic Association (Coimbatore) on the 2nd inst. (February 1935), the play being Rukmani Parinayam. (Since re-named Rukmani - Krishna.) He spoke very highly of the performance and presented a Gold Medal to Mr. M. Subramanian, Electrical Engineer, Coimbatore, for his excellent acting as Lord Sri Krishna and for his Bharatha-Natyam exhibition of Radha - Bhakthi .................Mr. M. Subramanian is the author of the above play...........

*(Hindu Weekly.)*

உ

# உருக்மணி-கிருஷ்ணன்

## ஓர் தமிழ் நாடகம்

---

ஸ்ரீமான். எம். சுப்பிரமணியன் பீ. இ.,

(மின்சார பிரதம இன்ஸ்பெக்டர்)

அவர்களால்

இயற்றப்பட்டது.

---

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—

மன்மத விஜயம், சந்தான கிருஷ்ணன், பெரியண்ணன் விருந்து,

பட்டிக்காட்டு முன்சீப், முதலியன.

---

1938

காபி ரைட். ]

[ விலை அணா 8

ஓம்

# DEDICATED
## TO THE
# DIVINE FLUTIST



Who bestowed

THE BOON OF SOCIETY, FRIENDSHIP & LOVE

and taught us

THE PATH OF DUTY, TRUTH & JUSTICE.

"ஒரு நிமிஷம் கூட விடாது கண்ணன் பஜனை செய்தாலும் அலுக்குமா, மனம்தான் சலிக்குமா? ஸர்வ தேவர்களும், முனிவர்களும் போற்றும் நாமதேயம் அல்லவா! அண்டினோர்க்கு அபயம் கொடுத்துத்தேற்றும் ஔஷதமல்லவா? பாச நாசம் செய்து சாந்தியும், முக்தியும் தரும் நாதமல்லவா!"

உருக்மணி.

"தனது சரணாரவிந்தத்தைப் போற்றிய யாவரையும் கேசவன் கைவிடார். அன்போடு கேட்பவருக்கு, இல்லை யென்று மறுக்க அவரால் முடியாது!"

விஜயம்.

"அவரை நம்பினவர்களுக்கு என்றும் ஸர்வ மங்களமுண்டாகும்."

உத்தவர்.

Presented By

# PREFACE.

4506

It is the instinctive faith of the lamb in his Shepherd that makes me smile in the face of the frowning clouds of cares and save myself from being drifted along aimlessly with them, as an anchorless raft. For I feel through the dim moving fog, a smiling Light, a charming Flute, a protecting Power and in my steadfast gaze at my Lord I see, that all the clouds disturbing and distressing me are only passing ones and become less opaque the more concentrated my yearning gaze develops. Faith is the Anchor of life.

The drama of Rukmani-Krishna is the conquest of Faith, over worldly obstacles. The steadfast belief of the Princess of Vidharba in the entity of the Divine Protector — the Lord of Lords: the Slave of His Bhakthas — and the marvellous manner in which apparently unsurmountable adverse conditions yielded in the fierce ray of her faith and hope is a revelation, which must enhearten all struggling souls.

At present, mythology and music are tabooed on the stage, if academic critics have to smile. But if mythological themes, which have so far kept the Hindu religion intact, have no place on the Stage or the Screen, where else can we enjoy them and light the Divine Spark in us. If music, the grand creation of the Flutist has no place at the theatre, where else would you have it. Music and Dramas are inseparably interwoven and cannot be divided without killing both.

In the unwavering faith that the world opinion will, in spite of temporary misdirections, revert to the same opinion, I am writing this mythological plot, at a time, when fashion demands a jeer at such tales.

In the preparation of this drama, I wish to express my thanks to Sri K. M. Sivaramakrishnan B.A., B.L., for his help during the drafting and to Sri S. Nagarajan B.A., for helping on editing. My thanks are also due to the members of the Coimbatore Music and Dramatic Association, who first staged this drama and secured for it a popularity.

*1st July 1938.* M. SUBRAMANIAN.

# முகவுரை.

4506.

வழியில், காலில் முள் அடிக்கடி தைத்துக்கொண்டிருக்குமாயின் வனத்தின் அழகை கவனியாமலிருப்பது அதிசயமன்று; கர்ம பாதையிலும் அவ்வாறே. பாசபந்தங்களால் மனம் தடுமாறி, ஸ்வய வாஞ்சையால் அவரவர்கள் பாதைகள் பிரிந்து, ஜாதி, மதம், என்னும் பேதம் உண்டாகி, உயர்வு, தாழ்வு என்னும் சங்கணங்கள் பூண்டு, அலையும் ஜீவன்கள், சுகதுக்கங்கள் என்னும் அவஸ்தையில் உழன்று, மெய்ப்பொருளை நினையாமலிருப்பது சகஜமே. ஆயினும் வனத்தில், மார்க்கம் தவறாமல் போக வேண்டுமாயின், அடிக்கடி முள் அவஸ்தைக்கிடையில் நிதானித்து, உண்மைப் பாதையைக் கவனித்துச் செல்ல வேண்டும்.

மாயாலீலைகளால் சதா உருமாறிக்கொண்டிருக்கும் இந்தப்பிரபஞ்சத்தில், மாலுமிக்கு த்ருவனைப்போல், நிலைநிறுத்தி உண்மை வழியைக்காட்டும் பொருள் ஒன்றே; தான் செய்யும் லீலைகளால், எல்லோரும் கோபியர்களைப்போல் தன்னைச்சுற்றிவர, அதனிடையில் அசைவற்று ஆட்டிவைக்கும் கபட நாடகசூத்ரதாரி அவரே! இவ்வாழ்வில் பாமரர்களுக்கு வழிகாட்டுவது அவர் பக்தியே.

உருக்மணி-கிருஷ்ணன் என்னும் திவ்ய சரிதமானது அவ்வித பக்தி மார்க்கத்தின் வெற்றியைக் காட்டுகிறது. பீஷ்மகுமாரி. எவ்வளவோ இடையூறுகளுக்கிடையில், தன் சுத்த பக்தியினாலும், திடநம்பிக்கையாலும், முக்தி அடைந்த விஷயம் படிப்பவர்களுக்குத் தைரியத்தைக் கொடுக்கக்கூடிய சரித்திரம்.

தற்பொழுது, புராணக்கதைகளையும், சங்கீதங்களையும் நாடக மேடைக்குக் கொண்டு வரலாகாது என்ற அபிப்ராயம் சிலர் வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் பிறகு எங்கு அவைகளை எடுத்துச் செல்வது என்று புரியவில்லை. கோவில்களினின்றும், வீடுகளிலிருந்தும், ஹிருதயங்களிலிருந்தும், பகவான் துரத்தப்பட்டு, நாடக மேடையிலாவது வரலாமென்றால், அங்கும் அவருக்கு இடமில்லை! நாடகத்திற்குச் சங்கீதம் உதவாவிட்டால், பிறகு எதற்கு அது உபயோகம்!!

ஆனந்த சூடாமணியின் லீலைகளை நாடகமேடையில் ஆடிக்காட்டாவிட்டால், எங்கு நடிப்பது ? ஆதலால், வேறுபுகலிடமின்றி, துரத்தப்பட்டபோதிலும் மறுபடி இப்புராணக்கதையை நாடக மேடைக்கு நான் கொண்டுவரத் தீர்மானித்தேன்.

இப்புஸ்தகம் தயாரிப்பதில் ஸ்ரீமான்கள் கே. எம். சிவராம கிருஷ்ணனும், எஸ். நாகராஜனும் செய்த உபகாரங்களைப் போற்றுகிறேன். இதை நாடக மேடையில் முதலில் நடித்து, நற்பெயரைச் சம்பாதித்துக் கொடுத்த கோவை சங்கீத நாடக சபையோர்களுக்கு என் வந்தனம் உரியது.

1-7-1938.

எம். சுப்பிரமணியன்.

# NOTICE.

4506

---

Those who intend staging this Drama are respectfully informed, that they should obtain the permission of the author before doing so. All rights are reserved.

# எச்சரிக்கை.

---

இந்த நாடகத்தை, சபையோர்களும், மற்றவர்களும், நடிக்க வேண்டுமென்றால், என் முன் அனுமதி பெற்றே அவ்வாறு செய்ய வேண்டும் என்பதை இத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# உருக்மணி-கிருஷ்ணன்

## நாடகப் பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீமந் நாராயணன் | ... | வைகுண்டநாதன் |
| ஸ்ரீ கிருஷ்ணபகவான் | ... | அவதார புருஷன் (கதாநாயகன்.) |
| பலராமன் | ... | ஸ்ரீ கிருஷ்ணபகவானின் சோதரன். |
| பீஷ்மராஜன் | ... | விதர்ப்ப தேச அரசன். |
| உருக்மி | ... | பீஷ்மனின் குமாரன். |
| தாருகன் | ... | ஸ்ரீ கிருஷ்ணபகவானின் தோழன். |
| நாரதர் | ... | தேவமுனிவர். |
| உத்தவர் | ... | விதர்ப்பத்திலோர் பிராமணர். கிருஷ்ண பக்தர். |
| மூன்று தேவ முனிவர்கள் | ... | சாதுக்கள். |
| மூன்று பிராமணர்கள் | ... | விதர்ப்ப வாசிகள். |
| மூன்று வீரர்கள் | ... | உருக்மியின் ஆட்கள். |
| ஸ்ரீதேவி, பூதேவி | ... | வைகுண்டநாதன் மனைவிகள். |
| உருக்மணி | ... | பீஷ்மனின் குமாரி. ( கதா நாயகி. ) |
| வனஜம், விஜயம் | ... | உருக்மணியின் தோழிகள். |

மற்றும், கோபிகாஸ்திரீகள், இடையர்கள், வயோதிகன், போர் வீரர்கள் முதலியோர்.

## கதை நிகழுமிடங்கள்.

ஸ்ரீவைகுண்டத்திலும், விதர்ப்ப தேசத்திலும், துவாரகையிலும், யமுனைக் கரையிலும்.

# காட்சிகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| காட்சி | 1. | ஸ்ரீ வைகுண்டம். |
| காட்சி | 2. | விதர்ப்பத்திலோர் வீதி. |
| காட்சி | 3. | உருக்மணியின் அந்தப்புரத்தில் தோட்டம். |
| காட்சி | 4. | கோகுலத்திலோர் பாதை. |
| காட்சி | 5. | யமுனைக்கரை. |
| காட்சி | 6. | விதர்ப்பத்திலோர் வீதி. |
| காட்சி | 7. | உருக்மணியின் அந்தப்புரம். |
| காட்சி | 8. | துவாரகையில் அரண்மனை. |
| காட்சி | 9. | விதர்ப்பத்திலோர் வீதி. |
| காட்சி | 10. | உருக்மணியின் பூஜாக்கிரஹம் |
| காட்சி | 11. | விதர்ப்பத்திலோர் பாதை. |
| காட்சி | 12. | காத்யாயினி கோவிலின் உள் கூடம். |
| காட்சி | 13. | ஓர் அறை. |
| காட்சி | 14. | நடுக்காடு (பிறகு) கருடவாகனம். |

ஸ்ரீ கிருஷ்ணன்

வேடத்தில்



நூலாசிரியர்

ஸ்ரீமான் எம். சுப்பிரமணியன்.

# உருக்மணி-கிருஷ்ணன்

## முதற் காட்சி.

### ஸ்ரீவைகுண்டம்.

[ஸ்ரீவைகுண்டத்தில், முன் காட்சி. நாரதரும், மூன்று முனிவர்களும், கைகூப்பியவண்ணம் துதித்துப் பாடுகின்றனர். பின் திரை வெடித்து, ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீதேவி, பூதேவி சமேதனாய்த் தோன்றுகிறார். முனிவர்கள் சிரம் வணங்கி, கரம் கூப்புகின்றனர்.]

ஸ்ரீ நா : பக்த சிகாமணிகளே, தன்யனானேன் உங்கள் நல்வரவால். தனியனாயிருக்கும் எனக்கு நீங்கள் தான் துணை. உங்கள் காட்சியே என் கண்களுக்குஜ் ஜோதி. நீங்கள் கூறும் பிரேமைச் சொற்களே, என் செவிகளுக்குக் கானம். என் பக்தர்களின் குறை தீர்ப்பதே, என் கடமை. என்னாலாவது ஏதேனுமுண்டோ?

மு மு : ஹே! கருணா ஸாகர, யாவும் அறிந்தும், யேதும் வெளியிடாமல் எங்கள் வாய்களினின்றும் அறிவது ஆனந்தமா? தாங்கள் சென்ற அவதாரத்தில், எங்களுக்குக் கொடுத்த வரம் என்று பலித்திடுமோ என்று, ஆவலுடன் காத்திருக்கும், இந்த தாஸர்களை யின்னுமா பரிசோதிப்பது?

ஸ்ரீ நா : அஃதாவது?

இ மு : எங்கள் உள்ளத்தில் பெருகும் பிரேமா பக்தியைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, சீக்கிரத்தில், சுந்தர ரூபமான கிருஷ்ணாவதாரம் எடுப்பதாகவும், அப்பொழுது நாங்கள்

நந்த கோகுலத்தில் கோபிகளாய் அவதரித்து, தங்களுக்குப் பணிவிடை செய்து முக்தி பெறலாமென்று அருளிய அருஞ் சொல்!

ஸ்ரீ நா: (சிரித்து,) அதுவா. ஏன்? உங்கள் பிரேமா பக்தியை இவ்விடத்தில் காட்டிக்கொள்ளலாகாதா?

நார: அதெப்படியாகும்? மாயை நீங்கி, அருளோடு நிறைந்திருக்கும் இச்சன்னிதானத்தில் என்றும் நித்யானந்தம் தான். ஆசையேது, தீர்ப்பதேது? காம க்ரோதாதிகளுமில்லை, அழிதலுமில்லை. அவைகளுக்கு மரண ஜனனம், வேண்டாமா?

மு மு: ஜகன்னாத, மேலும் இந்த பக்தர்களின் பொருட்டு, தேக சுகத்தையே கருதாது, மரவுரி தரித்து, கானில், காய் கனி தின்று, களைத்திருக்கும் அவதார புருஷனை, மறு அவதாரத்திலாவது, நாங்கள் போஷித்துச் சந்தோஷிக்க வேண்டுமென்கிற ஆவல் மேலிடுகிறது.

ஸ்ரீ நா: காலசக்கரத்தின் செயல்கள். முனிவர்களின் கோபாக்னிக்கு இரையாகி, நம் துவார பாலகர்கள் பூலோகம் சென்றனர். அங்கு அவர்களுடைய தபோக்னியின் வலிமையை எதிர்க்க முடியாது, முனிவர்கள் என்னை நாடியதாலன்றோ சென்ற அவதாரம் எடுக்க நேர்ந்தது?

நார: அடுத்த அவதாரம் இருவர்கள் பொருட்டும் எடுக்க வேண்டும். ஹே! தயாளா, நம் துவார பாலகர்களும் முக்தி அடையும் காலம் நெருங்கி விட்டது. தாம் கூறிய படி மூன்றவதாரங்களில் இரண்டு முடிந்தன. கடைசியாக சிசுபாலன், தந்தவக்ரனென்று, இப்பொழுது அவர்கள் புவியில் பிறந்து, தங்களுடைய வரவிற்குக் காத்திருக்கின்றனர். இம்முனிவர்கள் கூறிய வரங்கள் பொருட்டும், துவார பாலகர்கள் ஸ்வய நிலையை அடையும் பொருட்டும், தாங்கள் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேதனாய் அவதார மெடுக்க வேண்டும்.

ஸ்ரீ நா : என்ன ? இரண்டு மனைவிகளுடனுமா? சரி, உம்முடைய கலகத்திற்குத் தகுந்த ஸாதனங்கள் செய்து கொள்கிறீர்கள்.

பூதே : ஆம், நாதா, நானும் வருகிறேன். முன்னொரு அவதாரத்தில் என்னை அழைத்துச் சென்று, ஓர் அரக்கன் கையில் தவிக்க விட்டு, நான் ஓடி யோடி அலைந்தது போதும். மறு அவதாரத்திலாவது நாம் சுக தம்பதிகளாகத் தோன்றுவோம்.

ஸ்ரீதே : என் கதியுமப்படிதான். சென்ற அவதாரத்தில் நான் பட்ட பாடு போதும். அழாத நாளேயில்லை.

நார : தங்களுக்கு இனி கவலையே வேண்டாம். வருகிற ஜன்மத்தில் எல்லோருடைய இஷ்டப்படியே நடக்கும். உங்களோடு எவரும் சண்டைக்கு வரமாட்டார்கள்.

ஸ்ரீ நா : நீங்களே ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொள்ள வேண்டியதுதான் !! (ஸ்ரீதேவியைப் பார்த்து,) ஆனால், பிரியே, சென்ற அவதாரத்தில் உன் வரலாறுகளைக்கேட்டு நானாகவே உன்னை நாடி வந்தேன். இனி உன்முறை. வருகிற அவதாரத்தில் நீதான் என்னைத் தேடி யழைக்க வேண்டும். என்ன ?

நார : அதற்கென்ன ? அப்படியே. தங்களுடைய இஷ்டம் நேராதிருக்குமா ?

ஸ்ரீ நா : நீர் இருக்கும்போழுது எது தானாகாது ? முனிவர்களே, தங்களுடைய இஷ்டப்படியே நான் சீக்கிரம் நந்த கோகுலத்திற் தோன்றுவேன். நீங்கள் எல்லோரும், அங்கு கோபிகா ஸ்திரீகளாக அவதரித்து, என்னைக் காண்பீர்கள். (ஆசீர்வதித்து மறைகிறார்.)

[முனிவர்கள் துதித்துப்பாட, திரை விழுகிறது.]

---

## காட்சி 2.

[விதர்ப்பதேசத்திலோர் வீதியில் உத்தவர் பிக்ஷா பாத்திரத்துடன், பாடியவண்ணம் வருகிறார். அநேகர் அவரை வலம் வந்து, பிக்ஷை இட்டுச் செல்கின்றனர். வனஜமும், விஜயாளும் வருகிறார்கள்.]

வன: (நமஸ்கரித்து,) ஸ்வாமீ, தேவியார் தங்களுக்கிதை ஸமர்ப்பித்துவரும்படி கட்டளை யிட்டு இருக்கிறார்.

[ஓர் பட்டுவஸ்திரத்தைக் கொடுக்கிறாள்.]

உத்: எனக்காயிது? பரம ஏழை! எனக்கிது தகுமா?

விஜ: பகவன், தாங்களின்று காலையில், அரண்மனையில் பாடிய கோவிந்த கீதங்கள், இன்னுமிச் செவிகளில் தொனிக்கின்றன. உருக்மணிதேவியார் தம் மெய்மறந்து, ஆனந்த பாஷ்பம் பெருக, பரவசமானார். நினைவு தெளியும் முன் நீங்கள் வந்து விட்டீர்கள். ஆகவே, எங்களை அனுப்பினார்கள் இதனுடன்.

உத்: எல்லாம் மாதவன் செயல். இந்த இளம் பிராயத்தில் இவ்வளவு ஞானமும், பக்தியும், நம் இளவரசிக்கு ஏற்பட்டது நாம் முன் செய்த புண்யத்தின் பலனேயாகும். ஸகல ராஜ போகங்களையும், இன்ப விளையாட்டுகளையும் மதியாது, சதா கோபாலன் நினைவாகவும், அவர் அமிர்தமான நாமஸ்மரணையாகவும் இருப்பது அதிசயமே!

வன: அதுமட்டுமா, கண்ணன் திருவிளையாடல்களைப்பற்றி யாராவது கூறினால் போதும். ஊணும் வேண்டாம், உறக்கமும் வேண்டாம். ஆனந்தப் பரவசம்தான்.

விஜ: நந்தகுமாரனையன்றி, வேறெவரையும், மணப்பதில்லை யென்று தீர்மானித்திருக்கிறார். கேசவன் அருள் செய்தாலாயிற்று, இல்லையேல் கலியாணமின்றி கன்னிகையாகக் காலம் கழிப்பது திண்ணம்.

உத் : தன்னை அண்டினேரை என்றும் கைவிடார் கேசவன். அவரை நம்பினவர்களுக்கு என்றும் ஸர்வ மங்களமுண்டாகும். கவலைவேண்டாம்.

[ஆசீர்வதிக்கிறார், வனஜமும், விஜயாளும் விடை பெற்றுப் போகின்றனர்.]

(பட்டாடையைப் பார்த்து) என்ன அதிர்ஷ்டம். அகத்தி லிருக்கும் கேசவன் விக்கிரகத்திற்கு, சரியானவிரிப்பில்லை. தரையின் தூசி படைந்து மாசடைகிறது. இதை அதன்கீழ் விரிப்பேன்.

[குளிரால் நடுங்கிக்கொண்டு, ஓர் வயோதிகர் வருகிறார்]

அடாடா ! என்னபாபமிது ? இந்த முதிர்ந்தவயதில் எவ்வளவு அவஸ்தை ? ஸ்வாமி, ஏன் இப்படி நடுங்குகிறீர்கள் ?

வயோ : அப்பா, எனக்குக் கொஞ்சம் காய்ச்சல். அதிலும் மேலாடையில்லாது குளிர் நடுங்குகிறது.

உத் : வயோதிகரே, இத்தகைய தேகஸ்திதியில், நீங்கள் வீட்டை விட்டு வரலாமா ? தங்களுடைய வீடெங்கே ? அழைத்துச் செல்கிறேன், வாரும்.

வயோ : என் வீடா ! நான் ஒரு அனுதை.

உத் : அனுதையா ! அனுதையென்பது ஒருவரே யல்லவா ! அவரைத் தவிர அனுதை வேறேது ?

வயோ : அது யாரது ?

உத் : யாரா ! ஸர்வலோகரக்ஷகன், ஜகன்னுதன், நம்மை யெல்லாம் காக்கும் ஆபத் பந்து. அவருக்கு உதவுவார் யாருமில்லை. அவரே உண்மையான அனுதை. அவரிருக்குமளவும் நமக்கென்னகுறை ?

வயோ : நானுமவரைத்தான் பூர்ணமாய் நம்புகிறேன்.

[கைகூப்புகிறார்.]

உத் : இதோபாரும் அவருடைய கருணையை. நீங்கள் வருந்துவது அறிந்துதான் போலும், இதை யென்னிடம் கொடுத்திருக்கிறார். பெற்றுக்கொள்ளும்.

[பட்டாடையை வயோதிகர் மீது போர்த்துகிறார்.]

வயோ : ஹா ! ஹா !! இது உன்னுடையதா ?

உத் : அல்ல. கோபாலகிருஷ்ணன் நாமாவளியின் மஹிமை. என்தாயாரின் தயாள குணத்தின் அறிகுறி. இதுதங்களுடையது. வாருங்கள் என்னுடன்.

வயோ : எங்கே ?

உத் : தங்களுடைய கிரஹத்திற்கு. மாதவன் அருளால் ஒழிந்த நேரங்களில் அவர் சித்திரத்தை வைத்து, பூஜித்துப் பாடுவதற்கு ஓரிடம் கிடைத்திருக்கிறது. அங்குசெல்வோம்.

[அழைத்துச் செல்கிறார்.]

---

## காட்சி 3.

---

[நந்தவனம். உருக்மணியும், அவள் தோழிகளும் வருகின்றனர். பாடிக் கொண்டே, பூஜைக்கு பூக்களைக் கொய்கின்றனர்.]

உரு : வனஜம், அந்தப் பட்டாடையை பிராமணருக்குக் கொடுத்தனையாடீ ?

வன : ஏன், நான் கட்டிக் கொண்டு விடுவேனென்ற பயமா ?

உரு : போடி, எப்பொழுதும் பரிஹாஸம் தானுனக்கு. இல்லையடீ, அந்த பிராமணர் அகப்பட்டாரா என்று கேட்டேன்.

வன : அவர் அகப்படுவதற்கென்ன ? அடிக்கடி, இங்கு பிக்ஷைக்கு வருவாரே, உன் கண்களில் அவர் இன்றுதான் பட்டார் போலும்.

உரு : அப்படியா? வனஜம், இனிமேல் அவர் வரும் பொழுது என்னிடம் கூறு. கண்ணனுடைய பக்த சிகாமணி. அவர் மொழியும் கீதங்களும், நாமாவளிகளும் கேட்கக் கேட்க ஆனந்தம் தருகின்றன.

விஜ : கேட்பானேன். உனக்கென்றும் அந்த கோபாலன் ஸ்மரணை தான். கூடத் துணைக்கு இவரும் அகப்பட்டுவிட்டால், பிறகு கேட்க வேண்டியதில்லை.

வன : நித்ய பஜனைதான்.

உரு : ஏன் கூடாதடி? ஒரு நிமிஷம் கூட விடாது கண்ணன் பஜனை செய்தாலும், அலுக்குமாடி, மனம்தான் சலிக்குமா? ஸர்வ தேவர்களும், முனிவர்களும் போற்றும் நாமதேய மல்லவா அது? அண்டினோர்க்கு, அபயம் கொடுத்துத் தேற் றும், ஔஷதமல்லவா? பாச நாசம் செய்து, சாந்தியும், முக்தி யும் தரும் நாதமல்லவா? எவ்வளவு பாடினுற் தானென்ன?

வன : அது சரி. உருக்மணி, நீ இந்த பால்யத்தில் இப்படி எப் பொழுதும் பக்தியுடன் பாடிக்கொண்டே இருந்து விட் டால், உன்னை அடையும் கணவனின் கதியென்ன? விவாஹ காலம் நெருங்கி விட்டது.

உரு : போடீ, உனக்கு வேலை யில்லை?

[ கோபித்து, சற்றப்புரம் நிற்கிருள். ]

விஜ : ஏண்டீ வனஜம், உருக்மணியின் விவாஹத்தை நிச்சயம் செய்ய அரசன் ஒரு மந்திராலோசனைச் சபை கூட்டியிருக் கிருராமே, வரன் யார் தெரியுமா?

வன : இவ்வரசர் ஏதோ, சிசுபால மஹா ராஜாவிற்குக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகக் கேள்வி.

விஜ : மன்னன் கருத்து யாதோ?

வன : மன்னனையும், என்னையும் யார் கேழ்க்கிறார்கள் ? இளவரசர் ஓர் காரியம் செய்யத் தீர்மானித்து விட்டால், அதை யாரால் எதிர்க்க முடியும் ?

உரு : (சினந்து,) கல்யாணம் செய்து கொள்ளப் போவது யாரடீ ? நானா ? அண்ணாவா ?

விஜ : என்ன கோபமடி யம்மா ?

உரு : என் சம்மதமில்லாமல் ஏதாவது நிச்சயம் செய்வார்களா ? அப்படிச் செய்தால்தான் நான் உடன் படுவேனா ? ஏண்டி இந்த வீண் பேச்செல்லாம்

வன : ஆனால் நீயாகவே ஓர் வரனை நிச்சயித்திருக்கிறாயா ?

உரு : (மௌனம்.)

விஜ : அது யாரது ? உருக்மணி, எங்களிடம் கூறலாகாதா ?

உரு : ஆமாம். உங்களுக்குத் தெரியாது தான் ! என் மனப் போக்கை நன்றாய் அறிந்திருந்தும் என் வாயை யேன் கிண்டுகிறீர்கள் ? வம்புதானே ?

வன : உன் மனப்படியே பெரியோர்கள் தீர்மானிப்பாரென்பது என்ன நிச்சயம் ?

உரு : தீர்மானித்தாலென்ன, தீர்மானிக்கா விட்டாலென்ன ? நான் ஒரு க்ஷத்திரிய குலத்து மங்கை யென்பதை மறந்தனையா ? என் அண்ணன் பிடிவாதத்தில் பாதி எனக்குமுண்டு. பார்ப் போம்.

விஜ : நாளை சபையில் எல்லாம் தெரிகிறது.

வன : அதோ மன்னன் வருகிறார். அவரிடம் கூறிவிடுகிறேன், உருக்மணியின் மனப்போக்கை.

உரு : அடி சும்மாயிரு. இப்போது ஒன்றும் பேசாதே. நாளை சபை முடிந்த பிறகு ஆக வேண்டியதை யோசிப்போம்

[ஒரு புறம் நிற்கின்றனர்.]

[பீஷ்ம ராஜனும், நாரதரும் வருகிறார்கள்.]

பீஷ் : தபோநிதே, தங்கள் நல்வரவால் நானின்று அடைந்த கௌரவத்தையும், சந்தோஷத்தையும் கூற முடியாது. தங்களது கடாக்ஷத்தால் நாங்கள் பாக்யசாலிகளானோம்,

நார : இராஜன், நானுன்னைப்பார்த்து வெகு நாளாயிற்றே, உன் க்ஷேம விசாரம் அறிய வில்லையே யென்று கவலையுடனிருந் தேன். வருவதற்கு இப்போதுதான் காலம் ஏற்பட்டது. இராஜ்ஜியத்தில் எல்லோரும் க்ஷேமம் தானே ?

பீஷ் : தங்கள் கருணையால் எல்லோரும் க்ஷேமம். உருக்மணி, தேவ ரிஷியை நமஸ்கரி.

[உருக்மணி நாரதரையும், தன் தந்தையையும் வணங்குகிறாள்.]

நார : உருக்மணி, நீ சிறு குழந்தையாயிருந்த பொழுது பார்த்தது. நெடுநாளாயிற்று. உன்னை இப்பொழுது பார்த்தால் சாக்ஷாத் லக்ஷ்மி தேவியைப் போலவே யிருக்கிறது. ஆசீர்வாதம் செய்வதற்கும் ஸங்கோஜமாயிருக்கிறது. உனக்கு ஸர்வ மங்கள முண்டாகி, உன் மனதிற்கேற்ற மணாளனுடன் மகிழ்வாயென்பதே, என் மனப் பூர்வமான ஆசை.

உரு : பகவன், சிறியோர்களைப் புகழ்ந்து பேசுவது பெரியோர்கள் வழக்கம் போலும். ஸ்வாமி, தங்களுடைய ஆசிர்வாதத்தால் பாக்யவதியானேன்.

பீஷ் : தபோநிதே, நம் உருக்மணிக்கு ஏதாவது தகுந்த வரனை நிச்சயம் செய்து, விவாஹம் செய்வதாக உத்தேசம்.

நார : ஆக வேண்டியதுதானே. இதில் உருக்மணியின் மனோ பிப்ராயத்தையும் அறிய வேண்டும். அதைப்பற்றி அவள் தோழிகளைக் கேட்டால் தெரிகிறது.

பீஷ் : ஏதுமறியாக் குழந்தைகள்! அவர்களுக்கென்ன தெரியும், உலகானுபவம்?

நார : அப்படிக் கூறமுடியுமா? உருக்மணியும், தன் மனதிற்கேற்ற வரனை வரித்திருந்தாலும் இருக்கலாம். யார் கண்டது? என்ன உருக்மணி?

உரு : (வெட்கி, மௌனம்.)

பீஷ் : அவளுக்கு ஒன்றுதான் தெரியும். சதாகாலமும் கோபால கிருஷ்ணன் பஜனைதான். அந்த கோகுல சூடாமணியின் லீலைகளைக்கேட்டுக் கொண்டும், புகழ்ந்து கொண்டுமிருப் பாள்.

உரு : போங்களண்ணு. ஸ்வாமி நான் போய்வருகிறேன்.

[விடைபெற்று, தன் தோழிகளுடன் செல் கிறுள்.]

நார : தெரிகிறது. கண்ணன் பெயரைச் சொன்ன மாத்திரத்தில் உண்டான முகமலர்ச்சியைக் கவனித்தாயா? கிருஷ்ணனுக் கும் இன்னும் விவாஹம் ஆகவில்லையாமே? அவனை மருமக ஞக அடைபவனே பாக்கியசாலி.

பீஷ் : முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல்தான்!

நார : ஏன்? குலத்திலாகட்டும், குணத்திலாகட்டும், அழகிலாகட் டும், வித்தையிலாகட்டும், எல்லாவிஷயங்களிலும், நம் உருக் மணி, கோபாலனுக்குத் தக்கவரன் தானே? அதிலென்ன சந்தேகம்?

பீஷ் : என் மனப்பூர்வமான ஆசையும் அதுதான். ஆயினும்—

நார : ஆயினுமென்ன?

பீஷ் : ஒன்றுமில்லை. என் ஜேஷ்ட குமாரன் உருக்மிச்குமாத்திரம்...

நார : என்ன! உருக்மி கேசவனை வெருக்கிறுனு யென்ன!

பீஷ் : ஸ்வபாவத்தில் அவன் மிகவும் நல்லவனே. ஆனால், சகவாஸ தோஷத்தாலும், துற்போதனையாலும், தற்சமயம் அவன் மனது ஒருவாராயிருக்கிறது.

நார : ஏன் ?

பீஷ் : அவன் ஆப்தஸ்நேகிதன் சிசுபாலனுடைய துற்போதனை. கம்ஸனுடைய வதையைக் கேட்டதுமுதல், இவர்களிருவருக்கும் கோபாலன் மீது வெகுகோபம். நம் உருக்மணியை, சிசுபாலனுக்குக் கொடுக்கவேண்டுமென்பது அவன் எண்ணம்.

நார : உன்னைக் கேட்காமலா ?

பீஷ் : நானென்ன, ஓர் வயோதிகன். சைன்யம் முழுவதும் அவர்கள் வசமிருக்கிறது. என்ன ஆகுமோ, தெரியவில்லை. தங்கள் அனுக்ரஹத்தாலும், மாதவன் அருளாலும் தான், அவனுக்கு நன்மதி வரவேண்டும்.

நார : இரண்டிற்கும் குறைவில்லை. கால அளவில், அவனை இப்பொழுது மறைத்திருக்கும் அஞானமான இருள் நீங்கி, பரமனுடைய ஜோதியைக்கண்டு நலம் பெருவான். எல்லாம் உங்கள் இச்சைப்படியே கைகூடும். கவலை வேண்டாம். நான் போய்வரவா ?

(ஆசிர்வதித்துப் பாடிய வண்ணம் போகிறார். திரை விழுகிறது.]

---

## காட்சி 4.

---

[கோகுலத்திலோர் பாதை. நாரதர் வருகிறார்.]

நார : ஹா, ஹா, என்ன விந்தை. என்னையும் பிரமிக்கும்படி செய்த, இந்தமங்கை, பூலோகத்துக் கன்னிகை யல்ல. அழகும், காம்பீரமும், தேஜஸும், ஒருமிக்க உறவாடி மலர்ந்தது போல் என்ன பராசக்தி ! இந்த கோமகளின் முன் நான் நின்ற பொழுது, தாயினிடம் கன்றைப் போலவும், குருவின்

முன் சிடனைப் போலவும், அதிபதியின் முன் ஆளைப்போலவும் மனமானது அமைதி அடைந்து, ஆசீர்வதிப்பதற்குக் கூட நாயெழுவில்லை அல்லவா ! (சற்றுயோசித்து,) ஆம் அதுவே அறிந்தேன். உகை இரக்ஷணைக்காக இப்புவியில் அவதாரமெடுத்திருக்கும் உலகமாதா அல்லவா ? இந்த மர்மம் இதுவரையில் உணராமலிருந்து விட்டேனே. இப்பூமகள் அந்த அவதார புருஷனை நினைந்து, வருந்துவது சகஜம்தானே. நானும் இச்சமயம் துவாரகைக்குப் போகும்வழியில், இங்கு வந்தது தெய்வசங்கல்பம்தான். களங்கமற்ற, என் மனதிற் தோன்றுவது தவருகாது. ஆகையாலிதோ, காலதாமதம் செய்யாமல் துவாரகைக்குச் சென்று, பகவானைக்கண்டு, உருக்மணியின் மனோபீஷ்டம் நிறைவேறும் மார்க்கத்தைத் தேடவேண்டும்.

[ இரண்டு கோபிகாஸ்திரீகள் கையில் குடங்களுடன் பாடிக்கொண்டு வருகின்றனர். ]

மு கோ : அக்கா, சீக்கிரம் வா. நந்தகுமாரன் வருவதற்கு முன் நாம் போய்ச் சேரவேண்டும்.

இ கோ : இன்றுதான் சுதினம். நம் அருமைக் கோபாலனை, முன்போல் பிரேமையுடன் அண்டி, அவர் அமிர்தகானத்தில் ஈடுபட்டு, ஆனந்தக்களிப்பில் இந்நந்நாளைப் போக்குவோம்.

நார : ஓ ! ஹோ ! ! கண்ணனைப்பற்றி யல்லவா பேசுகிருர்கள். கோபியர்களே, இன்று என்ன விசேஷம் ?

மு கோ : என்னவிசேஷமா ? தாங்கள் இந்த ஊரல்லவோ ? உலகத்திற் கெல்லாம் சந்தோஷ சமாசாரம், உங்களுக்குத் தெரியாதா ?

நார : தெரியாமலென்ன ! இன்று துவாரகாபதி கோபால கிருஷ்ணனுடைய பிறந்தினமென்று. அதன் பொருட்டுதான் நானும் துவாரகைக்கு அவரைக்காணச் செல்கிறேன்.

இ கோ : (சிரித்து,) துவாரகைக்கா ? அவர் எங்களுக்கு கொடுத்திருக்கும் வரம் அறியீரா ?

நார : அதென்ன ?

மு கோ : ஒவ்வொரு வருஷமும், அவர் பிறந்த தினத்தன்று, யமுனைக் கரைக்கு வந்து, எங்களுடன் வசிப்பதாய் அருளிய வரம். இன்று பிருந்தாவனத்திற்கு வருவார்.

இ கோ : நாழிகையாகிறது அக்கா. ஸ்வாமி, தாங்களும் வாருங்கள். இன்று யமுனைக்கரையில் திவ்யமான காட்சிகளைக் காணலாம்.

[ இரு கோபிகைகளும் செல்கின்றனர்.]

நார : கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல், ஹே ! தீனபந்தோ, என்றும் பக்தர்களினருகில் இருக்கும் நீ, இன்று இங்கு வருவது அதிசயமல்ல ! இதோ, நானும் யமுனாதீரம் சென்று, கோபிகா ரமணனைக் கண்டு களிப்புறுவேன்,

[ போகிறார்.]

## காட்சி 5.

[ யமுனைக் கரையில், கோபிகாஸ்திரீகள் வேணுகோபால மூர்த்தியைச் சூழ்ந்து கோலாட்டம் போடுகின்றனர். சிலர் நடிக்கின்றனர். நாரதர் வருகிறார். இக்காட்சியைக்கண்டு, ஆனந்தப் பரவசமாய், கை கூப்பிய வண்ணம் ஓர் புறம் இருக்கிறார். நாரதர் சில சமயங்களில், நாட்டியத்தில் சேர்ந்து கொண்டும், சிலசமயங்களில் கை கட்டி கண் மூடியும் குதூகலத்தில் இருக்கிறான். நாட்டியம் முடிந்ததும், கிருஷ்ணன் சற்று முன்வந்து,]

கிரு : நாரதரே, வர வேண்டும். இன்று நான் செய்த பாக்யம். அபூர்வமாய் பூலோகத்திற்கு வந்ததுமன்றி, இங்கு இச் சமயம் என்னைத்தேடி வந்து அனுகிரஹித்தது.

நார : கோபாலா, நான் அகஸ்மாத்தாய் இன்று பூலோக சஞ்சாரம் செய்து வந்தேன். வந்தவன், உன்னைக் காணாது செல்ல மனம் வர வில்லை. அதிலும் இன்று உன் பிறந்ததின மன்றோ ?

கிரு : தாருகா, முனிவருக்கு நம்மேல் எவ்வளவு பிரியம் பார்த்தனையா ?

[ தாருகன் தலை அசைக்கிறான். ]

ஸ்வாமி, வரும் வழியில் ஏதாவது கண்டீரா? ஏதேனும் விசேஷமுண்டா ?

நார : (தனி) ஏது இவ்விதம் கேட்கிறார் தானகவே? (வெளி) முக்கியமாக ஒன்றுமில்லை. ஆனாலும், ஒரு இனிய சமாசாரம் உன்னிடம் கூறத்தகுந்தது உண்டு.

கிரு : அப்படியா.

[ முன் வருகிறார். கோபஸ்திரீகள், பின் திரையில் அநேக பாவனைகளுடன் அசைவற்று அமருகின்றனர்.]

அது யாது ?

நார : கோபாலா, வரும்பொழுது, ஓர் அற்புதமான மாமணியைக் கண்டேன். அதனழகையும், திவ்யகுணத்தையும், என்னவென்று வர்ணிப்பேன். தேஜோப் பிரகாசனை உனக்குத் தான் அது தகுமென்று, ஓர் எண்ணம் தோன்றியது.

கிரு : அவ்வளவு திவ்யமான மணியா ?

நார : கோபாலா, அதன் இயற்கையான பெருமையை என்னல் கூற முடியாது. அருங் காந்தியுடையது. படைத்தவனது கண்களைப் பறிக்கும்படியான உருவம். அதிகமாய்க் கூறுவானேன் ? நீ அதனைப் பார்ப்பாயாகில், ஆசையுடன் உன் வசமாக்கிக் கொள்வாய்.

கிரு : (சிரித்து,) தாருகா, மஹா முனி யுரைத்ததைக் கேட்டனையா ? ஓர் அற்புதமான மாமணியைக் கண்டனராம். மா-என்றால் லக்ஷ்மியல்லவா ? அதைப்போல சிறப்புடையது போலும். அது, கண்டோர்கள் மனதை உருக்குமாம். அந்த உ-ரு-க்கு-ம்-ம-ணி-யை (நாரதர் திடுக்கிடுகிறார்.) நான் அடைய வேண்டுமாம். ஸ்வாமி, இந்த உருக்கும்-மணி, இந்த புவி

தனில் ஜனித்தது தானே? அல்லது பூவில் அவதார மெடுத்ததோ ?

நார : (வெட்கி, விழிக்கிறார்.)

கிரு : தாருகா, முனிவர் சொல்வதைக் கேட்டால், எனக்கொரு சந்தேக முண்டாகிறது. அழகியமணி—அருங்காந்தி யுடையது—படைத்தவன் கண்களைப் பறிக்கும்படியானது—அதிசய குணமுடையது—பெண்களுக்குரிய குணங்களெல்லாம் இந்த மணிக்கு இருக்கிறது, பார்த்தனையா.

தாரு : அதுதான்— நானும் யோசிக்கிறேன். (யோசிக்கிறான்.)

நார : (சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து,) ஹே ! ஸர்வஞ்யா, அபசாரம், அபசாரம். எல்லாமறிந்த தங்களை நான் ஏமாற்ற முயல, என் செருக்கழித்தீர்கள். ஜகன்னாதா, நீர் அறியாத விஷயமா? ஆம், நான் கூறுவது பெண்மணிதான்.

தாரு : (யோசனையை முடித்து,) தாங்கள் கூறும்போதே, எனக்கும் அப்படித்தான் சந்தேக மேற்பட்டது.

நார : நடந்ததைச் சொல்கிறேன் கேளும். நானிங்கு வரும் வழியில், விதர்ப்ப தேசம் சென்றிருந்தேன். அங்கு பீஷ்மனின் குமாரியைக் கண்டேன். கண்டதும், மெய்மறந்து, பணியலானேன். அவள் குணாதிசயங்களை எவ்வாறு உரைப்பேன்.

காத்வா முகுந்த மஹதீ குலசீலரூப வித்யாவயோ த்ரவிண-
தாமபிராத்மதுல்யம் |
தீரா பதிம் குலவதீ ந வ்ருணீத கன்யா காலே ந்ருஸிம்ஹ-
நரலோக மனோபிராமம் ||

அதிகமாய்க்கூறுவானேன். நரலோகத்தில் சிங்கம் போல் விளங்கும் தங்களுக்கே சமானமாவாள்.

---

का त्वा मुकुन्द महती कुलशीलरूप विद्यावयोद्रविणधामभिरात्मतुल्यम् ।
धीरा पतिं कुलवती न वृणीत कन्या काले नृसिंह नरलोकमनोभिरामम् ॥

கிரு : நாரதரே, கன்னிகையைக்கண்டதும் நீராகவே வரன் நிச்சயம் செய்து விட்டீரே? அவளின் அபிப்ராயம் கேட்க வேண்டாமா?

நார : அதைத்தான் சொல்கிறேன் கேளும். அவள் தங்களுடைய குணாதிசயங்களைக் கேட்டு, அவைகளிலீடுபட்டு, சதாகாலமும், தங்கள் நினைவாகவும், ஸ்மரணையாகவும் இருக்கிறாள். அவளை நீர் கட்டாயம் ஆதரிக்க வேண்டும்.

கிரு : நான் என்ன செய்வது? அழையா வீட்டில் நுழைவதெப்படி? அவள் விவாஹ விஷயத்திலேதாவது நிச்சயம் செய்திருக்கிறார்களா?

நார : சீக்கிரம் நிச்சயம் செய்யப் போகிறார்களாம். அது எப்படியாயினும் சரி. என் எண்ணத்தை நீர் தான் பூர்த்தி செய்ய வேண்டும்.

கிரு : ஸ்வாமீ, அந்த ரூபவதியின் சித்திர மொன்று வரைவீரா? தாருகா ........

தாரு : முனீந்திரா, வாருங்கள் என் பின். எழுதுகோலும், பலகையும் தருகிறேன். (கிருஷ்ணனைக் காட்டி,) இவரை இப்பொழுது இங்கிருந்து அழைத்துச் செல்ல முடியாது. இந்த கோபிகைகள் விட மாட்டார்கள்.

கிரு : (பின்சென்று,) ஆம் இன்று இவர்களுக்கு நானடிமை.

[ சிரித்து, வேணுகானம் செய்ய, கோபிகைகள், கிருஷ்ணனைச் சுற்றி ஆடிப் பாடுகின்றனர். திரைவிழுகிறது. ]

ஸீதாராம் தபோவன
வாசக சாலை

## காட்சி 6.

[ விதர்ப்பத்திலோர் வீதியில் மூன்று பிராமணர்கள் பேசிக்கொண்டே வருகின்றனர். ]

மு-பி : அப்படியே செய்யும். நான் கடைப்பக்கம் போய் வேண்டிய சாமான்களை வாங்கிண்டு வரேன். நீங்க நேராக ஆத்துக்குப் போய், எல்லாரையும் அழைச்சிண்டு, அரமனைக்கு வந்துடுங்கோ. முஹூர்த்தக்கால் நட்டுண்டு இருக்காளாம்.

இ-பி : இதோ போகிறோம்.

மூ-பி : நம்ப தெருவு, குண்டா சாஸ்திரிக்குத் தெரிவிக்க வேண்டாமா?

மு-பி : வேண்டாம், வேண்டாம். அவர் வந்தா ஆபத்து. பெரிய கிருஷ்ணபக்தன். எதானும் அசம்பாவிதமா ஒளறிவைக்கும்.

இ-பி : (இரகசியமாய்,) நீர் சொல்றது சரிதானய்யா. சின்ன ராஜவோடே சைன்யமெல்லாம் அங்கங்கே கவனிச்சுண்டு இருக்காளாமே? அவர் நிச்சயம் பண்ணின வரனைப் பத்தி, தூறு பேசினு, அப்படியே புடிச்சுண்டு போருளாமே ?

மு-பி : நமக்கேண்டா இந்த வம்பு. “ மிருஷ்டான்னம் இதரே ஜனுன். ”

[ உத்தவர் வருகிறார். ]

உருக்மணி தேவியார் கலியாணம் விமரிசையாகத்தான் நடக்கும் போலிருக்கு.

[ ஒற்றைத் தும்மல் தும்முகிறான். ]

மு-பி : என்னய்யா இது, ஒத்தத்தும்மல் !

இ-பி : அதற்கென்ன ? இங்கும் பெரிய இடம், அங்கும் சேதி தேசத்து மன்னனில்லையா ?

உத் : (திடுக்கிட்டு,) யார் ! யார் ?

[ பிராமணர்கள் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டு, ]

இ-பி: என்ன அய்யா? என்ன கேட்கிறீர்?

உத்: கல்யாணம் யாருக்கு?

மூ-பி: நம்மிளவரசி உருக்மணிதேவிக்கு. ஊரெல்லாம் டமாரம் போடராளே உங்க காதுலே விழலையா?

உத்: இல்லை சேதிதேச மென்று சொன்னீர்களே?

இ-பி: அது புள்ளே வீடு. சிசுபால மஹா ராஜா இருக்காரே இல்லையோ, அவர்.

உத்: அப்படியா --

மூ-பி: நாழியாரது. நீ போ சீக்கிரம் கடைக்கு. நானும் ஆத்துக்குப் போய்ட்டு வரேன்.

மூ-பி: எல்லோரையும் அழைச்சிண்டுவா. சுப்பு— மொட்டைப் பையன்—உம்— குட்டி சாத்ரி— (தும்முகிறான்.)

[ பேசிக்கொண்டே போகின்றனர். ]

உத்: (பெருமூச்சுவிட்டு,) இது உண்மையாயிருக்குமா? கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பது போல், சதா காலமும் நிஷ்களங்க பக்தியுடன் கோபாலனை அண்டியிருக்கும் என் மாதாவையா அந்த கிருஷ்ண வைரி, குணக்கேடன், சேதிபதிக்குக் கொடுப்பது? சிங்கத்திற்கிடும் பலியை நரி யுண்ணுமா? தேவி இதற்குச் சம்மதிப்பாரென்று தோன்றவில்லை. எதற்கும் அரண்மனைக்குச் சென்று விசாரிப்போம். இது உண்மையாயின் இதை யெவ்வாறு தடுப்பது? என் விருப்பத்தை நிறைவேற்றுவார் யார்? ஆம். அனாதைகளின் குறை தீர்ப்பவர் அவர் ஒருவர்தான்.

[ யோசித்த வண்ணம் போகிறார். ]

## காட்சி 7.

---

உருக்மணியின் அந்தப் புரத்தில் சயனக்கிரஹம். உருக்மணி கிருஷ்ண படத்தின் முன் முழந்தாளிட்டு, அப்படத்தை உற்றுப் பார்த்த வண்ண மிருக்கிருள்.

உரு: ச்ருத்வா குணான்புவனஸுந்தர ச்ருண்வதாம் தே
நிர்விச்ய கர்ணவிவரைர்ஹரதோங்க தாபம் |
ரூபம் த்ருஸாம் த்ருஸிமதாமகிலார்த்த லாபம்
த்வய்யச்சுதாவிசதி சித்தமபத்ரபம் மே ||

கண்ணு என் ஆசை மன்னு, ஆசைப் பெருக்கால் எண்ணுத எண்ணங்களெல்லாம் எண்ணி, கிட்டாத உறவெல்லாம் கொண்டாடி, தங்களைச் சரணமடையும் நாளையே எதிர் பார்த்து, ஒரு தினம் ஒரு யுகமாகக் கழித்து வந்தேனே. "நல்ல கனவு காண்பவன் நடுக்கானில் விழித்தாற்போல்", என் மதி மயங்குகிறதே. என் தந்தை எவ்வளவு கூறியும் கேளாது, சங்கோஜத்தை யெல்லாம் விட்டு வெளிப்படையாக நான் எவ்வளவு கதறியும் மதியாது, என் சோதரன், ஒரே பிடிவாதத்துடன் தங்களுடைய ஜன்மத்வேஷி, மஹா பாபி, அவனுக்கு என்னை பலியிடத் தீர்மானித்து விட்டாரே.

ஐயோ, என் செய்வேன்? தேஜோப் பிரகாசமான உமது சுந்தர வதனத்தைக் கண்ணுரக் காணுமலும், தேனிலுமினிய உமது குரலைக் காதாரக் கேழ்க்காமலும், தேவாமிருதத்திலும் மேலான உமது அதரபானத்தை அருந்தாமலும், அடியாள் அரைக்கணமும் உம்மைப் பிரிந்திருக்க மனம் ஒப்புமா? தங்களை அடையும் மார்க்கத்தை அறியேனே? நானே சிறையிலடை பட்ட கைதியைப் போல் தயங்குகிறேனே? காந்தா, பக்தவத்ஸலா, நீதான் என்னை

---

श्रुत्वा गुणान्भुवनसुन्दर श्रृण्वतां ते निर्विश्य कर्णविवरैर्हरतोङ्गतापम् ।
रूपं दृशां दृशिमतामखिलार्थलाभं त्वय्यच्युताविशति चित्तमपत्रपं मे ॥

ரக்ஷிக்க வேண்டும். உன்னையே நம்பினேன். நான் அனாதை— அனாத ரக்ஷகா, நீயே கதி— நீதான் கதி.

[ தலை வணங்கி நமஸ்கரித்து, சோகத்தினால் மயக்கமடைகிறாள். ]

[ வனஜமும், விஜயாவும் வருகின்றனர். ]

விஜ: (அருகிற் சென்று) உருக்மணி, உருக்மணி.

[ உருக்மணியையும், கிருஷ்ண படத்தையும் மாறி மாறிப் பார்த்து பெருமூச்சு விடுகிறாள். ]

வன: (உருக்மணியைத் தேற்றி,) ஐயோ! உடம்பெல்லாம் நடுங்குகிறதே. உருக்மணி, நீ இவ்விதம் மனம் கலங்கலாமா? உனக்கேதாவது ஆபத்து நேர்ந்தால் நாங்களெப்படிச் சகிப்போம்? மனதைத் தேற்றிக்கொள்.

உரு: ஸகீ, எவ்வளவு ஆபத்துகள் நேர்ந்த போதிலும் என் மனோதிடம் கலைந்ததுண்டா? எப்பொழுதும் பொறுமையுடனும் உத்ஸாகத்துடனுமிருந்தேன். ஆனால் இப்பொழுது, அந்த பொறுமைக்கும், சந்தோஷத்திற்கும் ஆதிகாரணமாயிருந்த கேசவன் பாசமே என்னை வாட்டுகிறது. நான் என் செய்வேன்?

விஜ: தேவி, தாங்கள் எல்லாவற்றையும், அண்ணாவிடம் கூறி, அவர் மனதை மாற்ற முயன்றீரே, என்னவாயிற்று?

உரு: ஆவதென்னடீ? யார் என்ன சொன்ன போதிலும் தன் வீம்புதானே பெரிது அண்ணாவுக்கு. மேலும், அந்த சண்டாளன் என்னை அபகரிக்க நினைத்ததுமன்றி, என் அண்ணன் மனதையும் கலைத்திருக்கிறான். கண்ணன் பெயரைக் கூறிய மாத்திரத்தில் அண்ணன் பிடிவாதம் அதிகமாகிறது என் அதிர்ஷ்டமது.

வன: எதற்கும் கேசவன் மீது பாரத்தைப் போட்டு, அவரையே நம்பியிரும். இனி அவர் உதவியினால்தானாகும்.

உரு: ஸகீ, அவரால் தான் என்ன முடியுமினி? உருக்மணி யென்று இந்த பாபியிருப்பது கூட அவருக்குத் தெரியாதே? அவ்வாறு, கேட்டிருந்தாலும், என் மனோ நிலைமையை அவர் எங்கனமறிவர்?

விஜ: அதென்ன, அப்படிக் கூறுகிறீர்கள்? அகண்ட பரிபூரண நித்யானந்தன் அறியாத விஷயமுமுண்டா? பரமாத்மா மனங் கொண்டால், ஆகாத காரியமும் இருக்கிறதா?

வன: தேவி, இங்கு நடக்கும் எல்லா விஷயங்களையும், அவருக்கு நீங்கள் எழுதினால், அவர் தங்கள் மனோபிப்ராயம் ஈடேறும் மார்க்கம் தேடினாலும் தேடுவார்.

உரு: ஸகீ, நீ சொன்ன யோசனையே நானும் கருதினேன். ஆனால் ஓர் அன்னிய ஸ்த்ரீ கடித மெழுதுவதைப் பார்த்து, என் காதலர் என்ன நினைப்பாரோ, என்று பதறுகிறது என் நெஞ்சம்.

விஜ: அம்மணீ, அந்தக் கவலை தங்களுக்குச் சிறிதும் வேண்டாம். தனது சரணாரவிந்தத்தைப் போற்றிய யாவரையும் கேசவன் கைவிடார். அன்போடு கேட்பவருக்கு, இல்லையென்று மறுக்க அவராலியலாது.

வன: ஏண்டீ, கடிதத்தை எழுதி விட்டால் போதுமா? அதை எடுத்துச் செல்வதற்கு ஒருவர் வேண்டாமா?

விஜ: அதுதான் என் கவலையும். பார்ப்போம். யாராவது ஆபத் துணையாகக் கிடைப்பார்? இல்லையேல் நானே எடுத்துச் செல்கிறேன்.

உரு: நீயா! வெகு நன்று. துவாரகை யெங்கே, நாமெங்கே? (படத்தைப் பார்த்து,) ஏ கண்மணீ, என் மணவாளா, ஒவ்வொரு ஆலோசனைக்கும் இவ்விதம் இடையூறுகள் நேர்ந்து கொண்டே வருகின்றனவே. கண்ணா, உனக்கு என்னைப் பிடிக்க வில்லையா? இல்லை, என் மனோ திடத்தைப் பரி சோதிக்கின்றனையா? போதுமிந்த சோதனை. தாளேன்

இத்துயரம். பிராணபதே, தங்களுக்கு ஓர் கடிதம் அனுப்பலாமா? அதை யெடுத்துச் செல்ல யார் இருக்கிறார்கள்? நீர்தான் எனக்கோர் உபாயம் காட்ட வேண்டும். என்னை நீர் வெறுத்தாலும், உம் பாதத்தை விடுவதில்லை—ஆதரியும்.

[பகவத் நாமதேயம் பாடுகிறாள். பல்லவி முடிந்ததும் எதிர் தொனியாக உள்ளிருந்து அதே பல்லவி கேட்கிறது. எல்லோரும் திகைத்து நிற்கின்றனர்.]

உரு: உத்தவர்! உத்தவர்!! அடி வனஜம் அழைத்து வாடீ.

[வனஜம் சென்று உத்தவரை அழைத்து வருகிறாள். உத்தவர் பாடிய வண்ணம் வருகிறார்.]

உரு: பகவன் வரவேண்டும்.

[நமஸ்கரிக்கிறாள்.]

விஜ: ஸ்வாமி, ஏது இத்தருணத்தில் வந்தது? ஏதேனும் விசேஷமுண்டா?

உத்: தாயே, நானின்னும் சிலதினங்களுக்கு இங்கு வரமுடியாது. அதைத் தெரிவித்து விடைபெற்றுச் செல்லவே வந்தேன்.

உரு: என்ன! நீங்களும் ஊரை விட்டுப் போகிறீர்களா?

உத்: ஆம், ஓர் முக்கியமான விஷயத்தின் பொருட்டு, நான் துவாரகைக்குப் போக நிச்சயத்திருக்கிறேன்.

உரு: என்ன, என்ன? துவாரகைக்கா! (படத்தைப் பார்த்து,) கண்ணே, இதுவுமுன் கருணையா!!

விஜ: ஸ்வாமி, விசேஷமென்ன?

உத்: இதையும் தாங்கள் கேட்க வேண்டுமா? தாயே, கொலு மண்டபத்திற் நடந்த எல்லா விஷயங்களையும் அறிந்தேன். மனம் துடித்தேன். வேறு கதி காணாது, என் மனோரதத்தைத் தீர்த்துக்கொள்ள நான் துவாரகைக்குச் செல்ல

...ம தேப வன
வாசக சாலை



நிச்சயம் செய்திருக்கிறேன். கேசவனைக் கண்டு தங்களுக் குதவியாக, அவரை அழைத்து வா தீர்மானித்து விட்டேன்.

உரு: (சந்தோஷத்துடனும், பிரேமையுடனும்,) வாஸ்தவமா! கனவா !!

உத்: கண்ணனை வேண்டினோர் கைவிடப்படார்.

உரு: ஸ்வாமீ, துவாரகைக்குச் சென்றால் நான் அவருக்கோர் லிகிதம் தருகிறேன். எடுத்துச் செல்வீரா?

உத்: கரும்பு தின்னவும் கூலியா? தாயே, நானே தங்களிடம் ஓர் லிகிதம் வாங்கிச் செல்ல வேண்டு மென்கிற கருத்துடன் தான் வந்தேன். என் இச்சையும், தங்கள் உத்திரவும் ஒன்றாயின.

உரு: என் பாக்யமே, பாக்யம். (படத்திற்கு முழந்தாளிட்டு,) அண்டினோர்க்கு அபயம் கொடுத்து, ஆபத்தினின்றும் காக்கும் கருணாநிதே! உன் ஆளுகைக்குட்பட்ட எண்ணிழந்த உலகங்களில் ஒரு துளியாய், ஒரு மூலையில் ஒட்டிக் கதறும் இந்த துரும்பினிடமும் இவ்வளவு கருணையா !! ஜகன்னாத, நீர்தான் என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும். உம்மையே கதியென்றடைந்தேன். ஆனால்—

தன்மே பவான்கலு வ்ருதஹ பதிரங்க ஜாயாம்
ஆத்மார்பிதஸ்ச பவதோஅத்ர விபோ விதேஹி|
மா வீரபாகமபிமர்சது சைத்ய ஆராத்
கோமாயுவன் ம்ருக பதேற்பலிமம்புஜாக்ஷ ||

[பாடிச் சரணமடைகிறாள். திரை விழுகிறது.]

---

तन्मे भवान्खलु वृतः पतिरङ्ग जायामात्मार्पितश्च भवतोऽत्र विभो विधेहि ।
मा वीरभागमभिमर्शतु चैद्य आराद्गोमायुवन्मृगपतेर्बलिमम्बुजाक्ष ॥

## காட்சி 8.

[ துவாரகையில், கிருஷ்ணனுடைய சயனக்கிரஹம். மங்கிய வெளிச்சத்தில், மெல்லிய திரைகள் மூடிய மஞ்சத்தில், பகவான் சயனித்திருக்கிறார். இரண்டு மாதர்கள் மெதுவாக வந்து, உதய ராகம் பாடி, நமஸ்கரித்து, திரைகளை ஒதுக்கிச் செல்கின்றனர். காலை சூர்யனின் வெளிச்சம் அதிகரிக்க, கண்ணன் மெதுவாய் எழுந்து, யோசனையுடன் சிரித்து, ]

கிரு : நான் தினம் உறங்குவதாய், அவர்கள் கருத்து. என்ன விந்தை! காலசக்ரத்தின் செயல்களை. என்னவென்று சொல்வேன். காமக்ரோதரஹிதனாய் சகலத்தையும் துறந்த எனக்கும், கர்ம பாச பந்தங்கள் ஏற்பட்டனவன்றோ! ஏ, மதனா! நீ தான் உண்மையான வாழ்க்கைத் துணை. உன்னால் சகல ஸ்திரீகளும் தேவதைகளுக்குச் சமானமாகிறார்கள். மன்மத பாணங்களால் அடிபட்ட நான், சக்கரவாகப் பக்ஷியைப்போல் சரீரம் நொந்து, அனல் காற்றால் வாடும் புஷ்பத்தைப்போல் வாடலானேனல்லவா? மான் விழியாள் பீஷ்ம குமாரியின் குணங்களால் என் மனமானது கட்டுண்டு அசைவற்றிருக்கிறதே! சத்குண முடையவள், நற்செய்கைகளையே புரிபவள்; எப்பொழுதும் எக்காரியத்திலும் மற்றவர்கள் நன்மையையே நாடுபவள்; என் மனதிற்கேற்ற, குணங்களுடைய, இவளை நான் விவாஹம் செய்து கொள்வதே முறை. (சிந்தித்த வண்ணம் மஞ்சத்திலுட்காருகிறார்.)

(தாருகன் வருகிறான்.)

தாரு : (தனி) ஓ! ஹோ!! தேவரும் இன்று ஏதோ மயங்கினவர் போல் காணப்படுகிறார். சரி சரி, தெரிந்தது. (வெளி) தேவா, நமஸ்காரம்.

கிரு : சகா, வா.

தாரு : ஐய்யனே, ஏது வெகு ஆலோசனையில் இருக்கிறாற் போலிருக்கிறதே?

கிரு : அப்படி ஒன்றுமில்லையே. (எழுந்திருக்க, தாருகன் அவரைச் சீர் திருத்தி ஆபரணங்களைச் சூட்டிக்கொண்டே,)

தாரு : எனக்கெல்லாம் தெரியும், தாங்கள் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்களென்று———சொல்லவா ?

கிரு : சொல் பார்ப்போம் ?

தாரு : அன்று— நாரதர் கூறியது—கல்யாணம்—வாஸ்தவமா ?

கிரு : (ஆடைகளை அணிந்து கொண்டே,) சீ, உனக்கு வேலையில்லை, எப்பொழுதும் பரிஹாஸம்தான்.

[ தாருகனை உற்றுப் பார்க்கிறார். இருவர் கண்களும் சந்திக்க, சிரித்து அருகில் வந்து, தோளில் கையைப் போட்டு, ]

தாருகா, நீ சொல்வது நிஜந்தான். நடையில் அன்னத்தையும், அகண்ட கண்களில் சாரஸத்தையும், குரலில் குயிலையும், நிறத்தில் ஸ்வர்ணத்தையும், மந்தஹாஸத்தில் புஷ்பத்தையும், மதியில் நாமகளையும், ஒத்த மெல்லியாள், உருக்மணியை நாடி என் மனம் சஞ்சலமடைகிறது. என் செய்வேன் ?

தாரு : இதற்காகவா கவலை ? சந்தோஷமல்லவா படவேண்டும்.

கிரு : தாருகா, நான் நேற்று ஓர் கனவு கண்டேன். நானுறங்கும் பொழுது என் கனவில், அந்த பீஷ்ம குமாரி, தன்கையிலோர் தாமரைப் புஷ்பத்துடன் தோன்றி, விளையாட்டிற்காக, அப் புஷ்பத்தினுல் என்னை அடிக்க முன்வந்தாள். நான் ஆவலோடு எதிர் சென்றேன். அவள் கலகல வென்று சிரித்து, பூவை யெறிந்தாள். நான் அதைப் பிடிக்க, அது ஓர் ஓலையாக மாறிற்று. அதில் எழுதி யிருப்பதைப் படிக்க முயன்றேன். உடனே கனவு கலைந்து விழித்துக் கொண்டேன்.

தாரு : ஹே ! லீலா விநோதா ! மாயா ஜாலத்தைக் கற்ற தங்களுக்குமோர் மாயா ஜாலமா ? மஹா யோகிகளுக்கும், மதியைக் கொடுக்கும் தங்களுக்கும், மதி மயக்கமா ?

கிரு : ஸ்வப்பனத்தில் கண்ட அந்த மாதின் அழகை நான் என்னவென்று உரைப்பேன்? பிரம்மன் அவளைப் படைக்க அதிக முயற்சி எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அநேக நாட்கள் வரை ஆலோசித்து, சாதாரண மண்ணினின்றும் இவளைச் செய்யலாகாதென்று, தன் பீடமாகிய தாமரையினின்றும் ஓர் இதழை எடுத்து, கன்னிகையாக அமைத்திருக்க வேண்டும். இவளை நினைக்க நினைக்க, என் மனம் ஆசை அடைகிறது.

[பலராமன் வருகிறான்.]

பல : (கிருஷ்ணன் வரவேற்க,) கிருஷ்ணா, உன்னை ஓர் முக்கிய விஷயம் கேட்க வேண்டும். நீ பீஷ்ம குமாரியின் மீது காதல் கொண்டிருப்பதை, ஏன் என்னிடம் கூட கூறவில்லை? நானின்றுதான் அறிந்தேன், தாருகனிடமிருந்து.

கிரு : தாருகா!

தாரு : ப்ரபோ. (கைகட்டி நிற்கிறான்.)

பல : என்ன? அவனுரைத்தது வாஸ்தவமா? உன்னைப் பார்த்தாலும் சந்தேகமாயிருக்கிறது. எந்த இக்கட்டு நேர்ந்தாலும், மனம் கலங்காத நீ, இப்பொழுது சரியாக உண்பதுமில்லை, உறங்குவதுமில்லை. என்னேரமும் யோசனையிலாழ்ந்திருக்கிறாய்.

கிரு : அண்ணா, என் மனம் ஏதோ ஒருவாறு கலங்குகிறது.

பல : என்னிடம் முன்பே ஏன் கூறவில்லை? வெட்கப் பட்டனையா? அல்லது, பெண்ணைக் கொடுப்பார்களோ வென்ற சந்தேகமா? (கிருஷ்ணனின் தோளைத்தட்டி) என் சகோதரனுக்கும் பெண்ணைக் கொடேனென்று சொல்பவனுமுண்டா? உன் வதனத்தைக் கண்டாலே யாவரும் ஆசை கொள்வாரே. இனிக் கவலையையொழி. நான் விதர்ப்ப தேசத்திற்கு தூதர்களை யனுப்பி, விவாஹம் நிச்சயம் செய்கிறேன்.

[ஓர் தூதன் வருகிறான்.]

பல : என்ன விசேஷம் ?

தூத : சேதி தேசத்திலிருந்து வந்த ஓர் தூதன், இந்த லக்கினப் பத்திரிகையைக் கொடுத்துச் சென்ருன். (பத்திரிகையைக் கோடுக்கிருன்.)

பல : சரி போ.

[தூதன் போகிருன்.]

(பத்திரிகையைப் பிரித்துப்படித்து,) என்ன என்ன ? அவள் சகோதரனே இதற்குடன் பட்டானு ?

கிரு : அண்ணு, என்ன விசேஷம்?

பல : (கோபத்துடன்,) இதோ பார் சமாசாரம்.

கிரு : (பத்திரிகையை வாங்கிப் படித்து,) ஏ சிசுபாலா, போரில்தான் எனக்கு எதிரியாக வந்தாயென்ருல், காதல் விஷயத்திலுமா எனக்குப் போட்டியாய் வரவேண்டும்?

பல : என்ன ? என்ன ? மூடனும், மூர்க்கனுமான அந்த சிசு பாலனுக்கா, நீ காதல் கொண்ட மங்கையை நிச்சயம் செய் திருக்கிருர்கள் ?

கிரு : ஆம். கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டவில்லே !

[வருந்துகிருர்.]

பல : கிருஷ்ணு, நீ வருந்துவது நான் பார்த்திருப்பதா ? யாரங்கே ? தாருகா, நீ உடனே சென்று அரைநாழிகைக்குள் நமது சைன்யங்களை யெல்லாம் ஆயுதபாணிகளாக, அரண்மனை யெதிரில் வந்து சேரும்படி கட்டளையிட்டேனென்று சொல். உடனே விதர்ப்ப தேசம் நோக்கிப் போருக்குப் புறப்பட சித் தமாயிருக்கட்டும்.

[தாருகன் போகிருன்.]

கிருஷ்ணு, கவலையொழி. நானே இதோ சென்று அப்பூங் கொடியாளே, உன் பாதத்திற் கொண்டு வந்து சேர்க்கிறேன் பார்.

கிரு: அண்ணு. தாங்கள் கூறுவது சரியே. ஆயினும், நாம் முதலில் அந்த மங்கையின் மனதை அறிந்தல்லவா நடக்க வேண்டும்? அவளிஷ்டத்திற்கு விரோதமாக, அவளை அபகரித்து மணப்பதில் என் மனம் ஒப்பவில்லை.

பல: ஆனுல் என்ன செய்யலாமிப்போது?

கிரு: நாம் முதலில் உருக்மணியின் அபிப்ராயத்தை அறிய வேண்டும். அவளிஷ்டத்திற்கு விரோதமாக ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகத் தெரியவந்தால், பிறகு நடக்க வேண்டிய காரியம் ஒன்றும் பிரமாத மில்லை. இந்த சைன்யங்களெல்லாமெதற்கு? கோழி அடிக்கக் குறுந்தடியா? தாங்கள் ஒருவரே போதாதா?

பல: ஆனுல், அந்த மங்கையின் மனதை எப்படி அறிவது?

கிரு: அதைத்தான் நானும் யோசிக்கிறேன்?

[ தாருகன் வருகிருன். ]

தாரு: பிரபோ, விதர்ப்ப தேசத்தினின்றும் யாரோ ஒரு பிராமணர் அதிவேகமாய்த் தங்களைக்காண, ஓர் கடிதத்துடன் வந்திருக்கிருர்.

கிரு: என்னையா? என்ன கடிதம்?

தாரு: அது வெகு அந்தரங்கமான விஷயமென்றும், நேரில் தங்களிடம் கொடுக்க வேண்டுமென்றும் கூறினுர்.

கிரு: வரச்சொல்.

[ தாருகன் சென்று, உத்தவரை அழைத்து வருகிருன். ]

பிராமணேத்தமரே, நமஸ்கரிக்கிறேன். வரவேண்டும். தாங்கள் ஏதோ எனக்கொரு திருபம் கொண்டு வந்திருப்பதாய் அறிந்தேன்.

உத் : ஹே ! கோபாலா, ஆம். விதர்ப்ப தேசத்து இராஜகுமாரி தங்களிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து, தங்களுக்கிதனுல் மனமிரங்கினதும், கையோடு அழைத்து வரக் கட்டளை யிட்டு இருக்கிறார். அந்த மங்கையற்கரசியின் உயிரையும், இக் கடிதத்துடன் தங்கள் கையில் ஒப்புவித்து விட்டேன்.

[ ஓலையைக் கொடுத்து நமஸ்கரிக்கிறார். ]

கிரு : (கடிதத்தைப் படித்து, ஆனந்தமடைந்து, தயங்கித்தயங்கி, அதை பலராமனிடம் கோடுக்க, பலராமனும் படிக்கிறான்.)

பல : இதோ பார். இதை விட உனக்கு என்ன வேண்டும் ? அதுவும் இந்த ஐந்தாவது காவ்யத்தைப் பார்த்தாயா ?

ச்வோபாவினி த்வமஜிதோத்வஹனே விதர்பான்
குப்தஹ ஸமேத்ய ப்ருதனுபதிபிஹி பரீதஹ |
நிர்மத்ய செய்த்யமகதேந்த்ரபலம் ப்ரஸஹ்ய
மாம் ராக்ஷஸேன விதிநோத்வஹ வீர்யசுல்காம் ||

கிருஷ்ண உடனே புறப்படுவோம். பிராமணோத்தமரே சற்று சிரமப் பரிகாரம் செய்து கொண்டு வருகிறீர்களா ?

உத் : பூஜித, எனக்கு சிரமப் பரிகாரமும் வேண்டியதில்லை, ஆஹாரமும் வேண்டேன். தங்களுடைய வரவையே ஆவலுடன் எதிர் பார்த்து, உயிர் தத்தளித்துக் கொண்டிருக்கும், என் மாதாவைத் தேறுதல் கூறிய பிறகே, மற்ற விஷயங்களை கவனிப்பேன்.

கிரு : புண்யசீலரே, மெச்சினேன் உம் தயாள குணத்தை. எங்களிருவர் உயிரையும் காப்பாற்றி, இவ்வளவு பேருபகாரம் செய்த தங்களை எவ்விதம் புகழ்வேன் ?

---

श्वोभाविनि त्वमजितोद्वहने विदर्भान् गुप्तः समेत्य पृतनापतिभिः परीतः ।
निर्मत्य चैद्यमगधेन्द्रबलं प्रसह्य मां राक्षसेन विधिनोद्वह वीर्यशुल्काम्॥

உத் : பகவான், (அருகில் வர, கிருஷ்ணபலராமன் மந்தஹாஸத்துடன் ஸ்வரூபத்தில் நிற்க, அதைக்கண்டு பிரமித்து, ஞானம் உதித்து, வலம்வந்து பாடுகிறார்.) ஹா ஹா,

* (பாட்டு)

தீராதி தீரனென தேவர்களைப் போலிவர்கள்
மாறாத நாமமுயர் ராமனென கிருஷ்ணனென
தேயாத காந்தியொளி வீசப் பிரகாசமுடன்
கண்டேன் யான்.

க்ஷீராப்திசேஷனும் அவர் சயன மாயவனும்
சதா பாதாரவிந்தமே தொழுமம் மாதுவின்றி
ஏகாந்தமாயிவர்கள் பூவுலகில் வந்தனரோ
அறியேனே.

அனுதையாயெனது தேவியாரை தாரணியில்
தாயாகப் பாவித்ததில் தேறுதலடைந்த எந்தன்
சாயாதப் பாக்யவசத்தாலெந்தன் பிதாவினையும்
கண்டேனே.

தேவாதிதேவாயிந்த ஏழையின் விருப்பமிதே
மாதா பிதா இவரை ஏககால மாகக்கண்டு
பாதார விந்தமே சதாத் தொழுது முக்தி பெற
அருள்வீரே.

[ஆனந்த மடைந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறார். தாருகன் மெய்மறந்து நிற்கிறான். திரைமெதுவாக விழுகிறது.]

---

* [இப்பாட்டை "வங்கார மார்பிலணி" என்னும் திருப்புகழ் மெட்டிற் பாடவும்.]

## காட்சி 9.

---

[விதர்ப்பத்திலோர் வீதி. மூன்று போர் வீரர்கள் வருகின்றனர்.]

மு. போ : அடே, ஜாக்கிரதை. யாராவது கிருஷ்ணன் ஆசாமி போல தோணினு, அப்படியே புடிச்சுக்கோ. ஒருவேளே அந்தப்பயல்கள் கலகம் பண்ணினாலும் பண்ணுவா.

இ. போ : போடா. ஒண்ணு! ரெண்டா! விதர்ப்பம், சேதி தேசம், மகதேந்திரம், இந்த மூணு தேசத்துச் சேனைகளாக்கும் வந்திருக்கு. அசைக்கமுடியாது, ஒண்ணும்.

மூ. போ : அடே மகதேந்திர தேசத்துச் சேனைகள் எண்டா வந்தா?

மு. போ : எல்லாம் முன் ஜாக்கிரதையடா. நம்ப ஊரிலே, அவ்வளவு ஒத்துமே யில்லேபார். ஒருவேளே விதர்ப்பத்திலேயே கலகம் உண்டாச்சு; இல்லே, துவாரகைச் சேனைகளோடே நம்ப ஆசாமிகள் சேந்துட்டா, என்ன செய்யரது? எதுக்கும் கையிலே இருக்கட்டும்னுதான், நம்மசின்ன ராஜா அவாளேயும் வரச் சொன்னது.

இ. போ : இப்படியிருந்துமா நீ பயப்படரே?

மு. போ : பயமில்லே டா. ஒரு எச்சரிக்கே.

மூ. போ : அடே, அதோ சின்னராஜாவே வராரு பாரு,

[உருக்மி வருகிறான்.]

உரு : போர்வீரர்களே, ஏதானும் விசேஷமுண்டா?

மு. போ : இதுவரை ஒண்ணு மில்லேசாமி. ஒருகாக்காக் கூட கத்தலே.

உரு: சரி, இன்னும் கொஞ்சநாழிகைக்குள், கலியாணப்பெண் அரண்மனே பூஜைகளே முடித்துக் கொண்டு, காத்யாயினி கோவிலுக்குப் போவாள். அதுவரை அவளேப் பாதுகாக்க

வேண்டும். கோவிலிற் பெண்களைத் தவிர, யாரையும் விடாதீர். வெளியிலிருந்து பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். தெரியுமா ?

இ. போ : அப்படியே, பிரபோ.

உரு : சம்பந்திகள் அரண்மனையில் வேண்டிய காவல்கள் இருக்கின்றனவா ?

மு. போ : வேண்டியபேர் இருக்கா. அவா சேனைகளு மிருக்கா. எல்லாரும் ஆயுதபாணிகளா சித்தமாயிருக்கா.

உரு : (சிரித்து,) இனி என்ன செய்வான் பார்ப்பேன்—கோபாலன் ! அந்த இடையன்! அவன் கர்வத்தை அடக்கி, அவமானப் படுத்தும் பொருட்டே, உருக்மணிக்கு இந்த வரன் நிச்சயம் செய்தேன். தந்தையாருக்கு மட்டும் ஏனோ இந்த புத்தியீனம் ? எல்லாம் வயதின் கோளாறுகள். அடே, ஜாக்கிறதை.

[போகிறான்.]

மு. போ : வாங்கடா போலாம். சின்னராணி கோவிலுக்குப் புறப்பட்டுடுவா.

[போகின்றனர்.]

---

## காட்சி 10.

---

[ அரண்மனையில் உருக்மணி பிருந்தாவன பூஜை செய்கிறாள். வனஜமும், விஜயாவும் அவளருகில் நின்றுகொண்டு உதவு கின்றனர்.]

உரு : அடி வனஜம், இனி அரைக்கணமும் உயிர்தரித்திருக்க மனமில்லை. என்துயரம் சகிக்க முடியவில்லை. நமனுடைய முகத்தைப்பார்க்கக்காலம் கிட்டி விட்டது போலிருக்கிறது.

வன : அம்மணி, ஏன் அடிக் கொருதரம் விசனப் படுகிறீர்கள் ? யாவும் சுபமாகவே முடியுமென்று முந்தியே கூறியிருக்கிறேனே. வருத்தத்தை மறந்து அம்மனை பூஜியுங்கள்.

உரு : (பூஜை செய்து கொண்டே,) ஆம், சந்திர சேகரனின் மனைவியாகிய, பார்வதி பிராட்டியார்தான் என்னை ஆதரிக்கவேண்டும். அம்மணி, தாயே, பகவதி, நான் தங்களுக்கின்று செய்வது கடைசீ ஆராதனையோ?

விஜ : அம்மணி, வீணாக மனதைப்புண் படுத்திக் கொள்ள வேண்டாம். போன பிராமணர் இன்னும் திரும்பி வரவில்லை. தாமதத்தைப்பார்த்தால், காரியம் கைகூடி விட்டதென்றே தோன்றுகிறது.

உரு : இல்லையடீ. ஒருவேளை என்பிரிய நாயகன் அவர் கண்களில் தென்படாமல் இருந்திருப்பாரோ ? ஐயோ ! என் நாயகனை அடைவேனென்ற எண்ணத்தினால், ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத்தோன்றியும் பொறுத்து வந்தேனடீ ! முஹூர்த்த காலமும் நெருங்கிவிட்டதே ! என் தைரியமும் கைவிடுகிறதே, என்ன செய்வேன் !

வன : (ஓர் புறமாக,) கண்ணன் இன்னும் வரக்காணோம். அவரைத்தேடிப் போனவரும் திரும்பி வரவில்லையே.

உரு : இனி நான் அவரை இப்பிறப்பில் அடைவேனென்கிற ஆசையை விட்டு விட்டேன். இனி உயிர் தரித்திருப்பதில் பிரயோஜனமில்லை. நாதா, உங்களை அடைய முடியாத பாபி, மறுபிறப்பிலாவது அடைவேனா ?

யஸ்யாங்க்ரி பங்கஜ ரஜஹ ஸ்னபனம் மஹாந்தோ
வாஞ்சன்த்யுமா பதிரிவாத்மதமோ பஹத்யை |
யர்ஹ்யம் புஜாக்ஷ ந லபேய பவத் ப்ரஸாதம்
ஜஹ்யாம ஸூன்வ்ரத க்ருசான் சதஜன்மபிஹி ஸ்யாத் ||

ஈச்வரி, மறுபிறப்பிலேனும் அந்த புருஷோத்தமனுடைய பாத கமலங்களுக்குப் பணிவிடை புரியும் பாக்கியம் பெறுமாறு அனுக்கிரஹம் செய்ய வேண்டும்.

---

यस्याङ्घ्रिपङ्कजरजः स्नपनं महान्तो वाञ्छन्त्युमापतिरिवात्मतमोपहत्यै ।
यर्ह्यम्बुजाक्ष न लभेय भवत्प्रसादं जह्यामसून्व्रतकृशान् शतजन्मभिः स्यात् ॥

விஜ : அம்மணி, நாம் கௌரிவிலாசத்திற்குச் செல்லும் சமயம் வந்து விட்டது.

உரு : ஸகீ, நான் இறப்பதற்கு அஞ்ச வில்லையடி. ஆயினும், இறக்குமுன் ஒரு முறை யேனும் அவர் வதனாம்போருகத்தைத் தரிசித்து, என் சோகத்தைத் தேற்றிக்கொள்வேனாகில் பிறகு எதுவும் வேண்டேன். ஹே, தயாளா! என்னைப்போல், மன்மத தாபத்தால் நொந்த, ராதை முதலிய இடைச் சேரியிலுள்ள கோபஸ்திரீகளுக்குக் கருணை புரிந்துவந்த தங்களுக்கு வேறொருகதியுமில்லாத, அனாதை, என்னிட மேனோ இந்த பராமுகம்? சிறுவயது முதல் தங்களையே அண்டி சரணாகதி அடைந்தவள், என்று அறியீரா? இத்தருணம் இந்த பாபியை நீங்களும் கை விட்டால் வேறுயார் எனக்குத்துணை, நாதா?

வன : ஐயோ! இதில் என்ன விபரீதங்கள் நேருமோ? அம்மணி, உம்மைப் போன்ற புண்ணியவதிகளுக்கும் துயரம் வருகிறதே?

விஜ : அதோ இளவரசரே வருகிறார் அம்மணி.

[உருக்மி வருகிறான்.]

உ-மி : உருக்மணி, விவாஹத்திற்கு முஹூர்த்தகாலம் நெருங்கி விட்டது. சிசுபாலன், முதலியோர் வந்து விட்டார்கள். காத்யாயினி தேவி ஆலயத்திற்குப் புறப்பட எல்லாம் சித்தமாயிருக்கிறதா?

உ-ணி : அண்ணா, இன்னும் ஏனோ என்னை வருத்துகிறீர்? இதினின்றும் தப்ப வழியில்லையா?

உ-மி : உருக்மணீ, ஏது மறுபடியும் பழய கதையையே ஆரம்பித்தாயே? முஹூர்த்த மெல்லாம் நிச்சயமாகி விட்டது. இனி எங்கள் சொல் மீறி நடக்கலாமா?

உ-ணி : அண்ணா, என் இஷ்டத்திற்கும், சுகத்திற்கும் மாறாக வரனை நிச்சயம் செய்தால் அதற்குடன்பட்டுத் தானாக வேண்டுமா ?

உ-மி : இதெல்லா மென்ன பைத்தியக்காரப் பேச்சு ? நானிப்பொழுது நிச்சயித்திருக்கும் வரனுக்கு என்ன குறைவு ? உன்னை சேதி தேசத்துக்கரசி யாக்கி, ஆனந்திக்க ஏற்பாடுகள் செய்ய உனக் கென்ன அழுகை.

உ-ணி : அண்ணா, என்மனம் ஒருவர்மீது காதலடைந்திருக்க, வேறு ஒருவனைக் கணவனாக ஏற்றுக்கொண்டால், என்கற்பிற்கே பங்கமாகவில்லையா ?

உ-மி : சரி. உனக்குப் பைத்தியம் முற்றிவிட்டது. இனி வீண் பேச்சு வேண்டாம். எனக்கு அவமரியாதையா செய்கிறாய் ? காதல் கொண்டிருக்கு மோர் கபடனை அடைய வேண்டுமாம் ! போதும் உன் புத்தி. நீ இப்பொழுதே சிசுபாலனை மணக்க வரவேண்டும். என்னுடைய கட்டளையை மீறி நடக்க தைரிய மிருக்கிறதா பார்ப்போம். — காதல் — பெயரைப்பார்.

உ-ணி : ( காலில் விழுந்து, ) அண்ணா, வீணாக என்மேல் கோபம் வேண்டாம். என் சுகதுக்கங்கள் தங்களையும் பொருத்த தல்லவா ?

உ-மி : போதும் உன் பிரசங்கம் — விடு காலை. என் கட்டளையை மீறி நடப்பாயாகில், இனி ஒரு க்ஷணமும் இந்த இராஜ்யத்தில் தங்கலாகாது. இதோ நான் சென்று உன்னை ஆலயத்திற் கழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்கிறேன். சித்தமாயிரு. ( கோபித்துப் போகிறான். )

உ-ணி : (எழுந்து, தோழியின் தோளிற் சாய்ந்து ) ஸகி, நான் நாடிய நாதனை மட்டும் அடைவேனாகில், இந்த இராஜ்யங்க ளெல்லா மெதற்கு ? என் நாதனுக்கு இன்னும் என்மேல் கருணை வரவில்லையே ? ( சாந்த மடைந்து, தீர்மானத்துடன், ) ஸகி, இனி உருக்மணி யென்று ஓர் பாவி இருந்தாளென்பதை

மறந்துவிடு. இனி நான் ஏன் உயிர்வாழவேண்டும்? என் சொந்த பந்துக்களே பகைவர்களானுர்கள். அறியாவயது முதல் காதலித்துவந்த கண்ணனும் கை விட்டார். இனி யோசிப்பதிற் பிரயோசன மில்லே. க்ஷத்திரிய குலத்து மங்கை நான், செய்யும் கடமை ஒன்றே.

விஜ: இதென்ன சங்கடம்? நாங்கள் என்ன செய்வது? அம்மா, அம்மா, (அழுகிருள்).

உ-ணி: ஆயினும், ஸகீ, ஒரு ப்ரேமை: நான் இறக்குமுன், ஒரு முறை யாவது — அவரைக் காண்பேனுகில் — நாதா — நாதா — ஹே —ஜகன்னுதா! (மனமுடைய நிற்கதியாய்க் கூவுகிருள்.)

[உள்ளே உத்தவர் குரல் கேட்கிறது.]

உத்: வந்தார் — வந்தார் — கேசவன் வந்தார் தாயே.

வன: அம்மணி — அம்மணி — அதோ! அதோ!!

விய: உ-த்-த-வ-ர்! ...........உ-த்-த-வ-ர்!!

உ-ணி: ஹா! எங்கே? எங்கே?

[அதிவேகமாய் உத்தவர் வருகிருர்.]

உத்: வந்தார் கண்ணன். கோபாலன் வந்தார். தாயே என் தந்தை வந்துவிட்டார்.

விஜ: ஸ்வாமி, கண்ணபிரான் நமது அரசியை மணம்புரிய வந்து விட்டாரா? எங்கே அவர்?

உத்: நான் கடிதம் கொடுத்ததுமே, ஒரு க்ஷணமும் தாமதியாது, பலராம சகிதம் புறப்பட்டு, அதி வேகமாய் என்னுடன் இங்கருக்கு வந்துவிட்டார். இப்பொழுது காத்யாயினி ஆலயத்திற் கருகிலுள்ள தோட்டத்திலிருக்கிருர்.

உ-ணி : பிறகு ?

உத் : ஆலயத்தினுள் தங்களைக் கண்டு, அழைத்துச் செல்வதாய்த் தீர்மானித்து, உங்களை முன் எச்சரிக்கை செய்யவே, என்னை அனுப்பினர்.

உ-ணி : (ஆனந்தக் கண்ணீருடன்,) ஸ்வாமி, இந்த ஏழையின் பொருட்டு தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு, என்னருமைக்காதலரை இங்கு அழைத்துவந்ததற்கு, நாங்கள் என்ன கைம்மாறுசெய்வோம்.

[ஆபரணங்களை எடுத்துப் பார்க்கிருள்.]

உத் : தாயே, எப்பொழுதும் உங்கள் அடிபணியுமிந்த ஆண்டிக்கா தாங்கள் கைம்மாறு செய்வது? அந்த ஜகன்னாதனுக்கேற்ற லோகநாயகி தாங்களே. தங்களிருவரையும் சதா சேவை செய்து முக்தி அடைய வேண்டும். அதுவே நான் கோருகிறது.

உ-ணி : (மகரகண்டியை எடுத்து) பகவன், இதோ — இதெனக்கு மிகவும் பாரமாயிருக்கிறது. (தயங்கி, பின்வாங்கி, தனி) வனஜம், இவர் செய்த உபகாரத்திற்கு, இந்த மகர கண்டி எம்மாத்திரமடீ ?

வன : (தனி) ஆமம்மா. அவருக்குப் பிரதியுபகாரஞ் செய்வதென்றால் எவ்வளவு மகரகண்டிகள் அளித்தாலும் போதாதே.

உ-ணி : ஸ்வாமீ, தாங்கள் சற்று முன்பாக "லோகநாயகி" யென்று புகழ்ந்த யான், தங்களுக்குக் கைம்மாறு செய்ய அசக்தளாய் இருக்கிறேன். என்னை மன்னித்து, இதோ என்னாலியன்ற இந்த நமஸ்காரத்தைப் பெற்று, என்னை ஆசிர்வதிக்கவேண்டும்.

[உத்தவரை வலம் வந்து நமஸ்கரிக்கிருள். திரை விழுகிறது.]

---

## காட்சி 11.

[விதர்ப்பத்தில், காத்யாயினி ஆலயத்தினருகிலோர் பாதை. கிருஷ்ணனும், தாருகனும் வருகின்றனர்.]

கிரு : (உருக்மணியின் கடிதத்தைப் படித்தவண்ணம்,) சகா, என்ன உபாயம் பார்த்தனையா? என் மனோ நாயகி எழுதியிருப்பதைக்கேள்.

அந்தப் புராந்தர சரீமனிஹத்ய பந்தூம்
ஸ்த்வாமுத்வஹே கதமிதி ப்ரவதாம்யு பாயம் |
பூர்வேத்யுரஸ்தி மஹதீ குலதேவியாத்ரா
யஸ்யாம்பஹிர்ன வவதூர் கிரிஜா முபேயாத் ||

மங்கள தினமின்று, ஓர் உயிர்ச்சேத மில்லாமல், காரியம் கைகூடும் விதம். ஏன் இன்னுமவர்கள் வரவில்லை?

தாரு : தேவா, வரும் சமயமாய் விட்டது. நாம் சற்றுமறைவிலிருப்பதே உசிதம்.

கிரு : அண்ணாவும் வரவில்லை. அப்பொழுதே ஆயுதபாணியாய் பின் தொடருவதாய்க் கூறினாரே. நண்பா, அதோ தெரிகிறதே அதுதானா காத்யாயினி தேவியின் ஆலயம்?

தாரு : ஆமாம், அதிற் "கௌரிவிலாசம்" என்னும் மண்டபத்திற்றான் மணமகள் பூசை செய்வது வழக்கமாம்.

கிரு : என்ன அழகு? என்ன காம்பீரம்? ஸ்வர்ணமிழைத்த சிகரங்கள் ஆகாய மார்க்கத்தையே மறைக்கின்றனவே! அதன்முன், கோபுர வரிசைகள், சரத்கால மேகங்களைப்போல் ஜ்வலிக்கின்றனவே!

---

अन्तः पुरान्तरचरीमनिहत्य बन्धू स्त्वामुद्वहे कथमिति प्रवदाम्युपायम् ।
पूर्वेद्युरस्ति महती कुलदेवियात्रा यस्यां बहिर्नववधूर्गिरिजामूपेयात् ॥

தாரு : உண்மையே, மேலும் கோவில் வாயிலில், அநேக நாரீ மணிகள் தங்கள் கைகளில் தங்கக் காம்புடைய சாமரங்களைப் பிடித்து, அன்னப் பறவைகளைப் போல் நடமாடுகிறார்கள், பார்த்தீர்களா ?

[உள்ளே யானை மணி ஓசை கேட்கிறது.]

கிரு : அதோ யானைக் கழுத்தின் மணியோசை. இந்தப் பக்கம் தான் வருகிறார்கள்.

[இருவரும் உற்றுப்பார்க்கின்றனர்,]

தாரு : பார்த்தீர்களா ! மங்கள ஹாரத்தியுடன் வயோதிக சுமங்கலிகளும், தீபங்களுடன் பருவ மங்கையர்களும் வருகிறார்கள். போர் வீரர்கள் இருவரிசையாகத் தங்கி வருகிறார்கள்.

கிரு : நண்பா, நக்ஷத்திரங்களுக் கிடையில் மேகமில்லாச் சந்திரனைப் போல் பிரகாசிக்கும் அதுயார்? ஆம், அது தான் என்னருமைக் காதலியாய் இருக்க வேண்டும். கண்டக்ஷணத்திலேயே என் மனதைக் கொள்ளைகொண்ட ரூபவதி வேறு யாராய் இருக்கக் கூடும்? என்னே இவள் சௌந்தரியம் !

[உற்றுப் பார்த்த வண்ணமிருக்க, பின்னால் பலராமனும், உத்தவரும் வருகின்றனர்.]

பல : கிருஷ்ணா என்ன செய்கிறாய் இங்கே? மறைவிலிருக்க வேண்டாமா ? இப்படியா எல்லோர் கண்களிலும் படும்படி நிற்பது? எங்கே உன்னுடன் வந்த தாருகன் ?

தாரு : இதோ அரசே.

பல : வாருங்கள் எல்லோரும். நடக்க வேண்டிய காரியங்களைப் பார்ப்போம். வா கிருஷ்ணா.

[போகின்றனர்.]

## காட்சி 12.

---

[கார்த்யாயினி கோவிலில், உள் கூடம். உருக்மணி அம்மனை பூஜைசெய்துகொண்டிருக்கிறாள்.]

உ-ணி : வனஜம், அரசகுமாரியாய்ப் பிறந்தால் எவ்வளவு கஷ்டம் பார்த்தனையா? ஓர் ஏழைப் பெண்ணாயிருந்தால், என் மனதிற்கேற்ற நாதனை எவ்வளவு எளிதில் அடைந்திருப்பேன்.

வன : இப்பொழுதென்ன குறை? உங்களிஷ்டந்தான் சீக்கிரம் நிறைவேறப்போகிறதே. (உருக்மணிக்குப் பூவைச்சூட்டுகிறாள்.)

உ-ணி : (மனங் கலங்கி) அடி தோழி, உங்கள் கைகளால் ஸ்ருங்காரமடையும் பாக்கியம் மறுபடியும் எப்பொழுது கிடைக்குமடீ?

வன : உருக்மணி, சந்தோஷ தினமின்று. நீ மனம் கலங்கி அழக்கூடாது.

உ-ணி : உங்களைப் பிரிந்து, எப்படியடி சந்தோஷமா யிருப்பேன்? யாரிடம் உங்களை ஒப்புவிப்பது?

விஜ : உருக்மணி, நீ யார் கையில் சேரப்போகிறாயோ, அவர் பாதாரவிந்தத்தை நாங்கள் சேரப்போகிறோம்.

வன : தேவீ, நாங்களும் சீக்கிரம் துவாரகை வந்து, தங்களைச் சேருவோம். கவலைவேண்டாம்.

உ-ணி : அந்த பாக்கியமும் கிடைக்குமாகில், பிறகு எனக்கு மனக்குறையே யில்லை. ஸகீ, ஏன் இன்னும் அவர் வரவில்லை.

வன : பார்த்தீர்களா, இதற்குள் அவசரம்.

உ-ணி : இல்லையடீ. அவர் வரும்வரையில் என் மனோரதம் நிறைவேறுமோ என்ற சந்தேகம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நான் என் செய்வேன்? பிராணகாந்தா, தங்களைக் காணாது இனி அரை க்ஷணமும் இருக்கமாட்டேன். (முழங்

தாளிட்டு,) அடியாள்மீது அருள்புரிந்து, என்னை யாட்கொண்டு உம்மிடம் அழைத்துச் செல்லுமே. (கண்மூடித் துதிக்கிருள்).

பூர்த்தேஷ்ட தத்த நியமவ்ரததேவ விப்ரகுர்
வர்ச்சனுதிபிர் அலம் பகவான் பரேசஹ |
ஆராதிதோ யதி கதாக்ரஜ ஏத்ய பாணிம் க்ருஹ்ணுது மே
ந தமகோஷ ஸுதாதயோன்யே ||

[பின்னிருந்து கிருஷ்ணன் தோன்றி, உருக்மணியிடம் வருகிறார். அவளை ஸ்ருங்காரத்துடன் பார்த்து,]

கிரு : கண்மணீ.

[உருக்மணி கண்விழித்து எழுந்து, ஆசையுடனும், ஆனந்தத்துடனும், நாணத்துடனும், உடல் நடுங்க, ஒடுங்கி, கடைக்கண் பார்வையுடன் நிற்கிருள்.]

விஜ : வனஜம், வெளியில் என்னடி சப்தம்? பார்த்துவிட்டு வரலாம் வா.

உ-ணி : என்னைத் தனியே விட்டுச் செல்கிறீர்களா?

வன : தனி யென்னடி யம்மா? உலக நாதன் உனதருகிலிருக்கும் போது, உனக்கென்ன பயம்? (சிரித்து, வெளியே போகின்றனர்.)

கிரு : கண்மணீ, என்னை வேண்டி ஆவலுடனிருந்த நீ என்னைக் கண்டதும் பராமுகமாய் நிற்கும் காரணமென்ன? இதுவரையில் நான் தாமதித்து உன்னை தவிக்கவிட்டேனென்ற கோபமா?

உ-ணி : நாதா, கருணுசாகரனுகிய உங்கள் மீது நானு கோபிப்பேன்? சூரியனைக் கண்டவுடன் என் கண்கள் கூசின! தங்களை அடை

---

पूर्तेष्टदत्तनियमव्रतदेव विप्रगुर्वर्चनादिभिरलं भगवान्परेशः ।
आराधितो यदि गदाग्रज एत्य पाणिं गृह्णातु मे न दमघोषसुतादयोऽन्ये ॥

வேறு என்று மனங்கலங்கி யிருந்ததால் இது உண்மையா, கனவா என்ற சந்தேகமுதித்தது.

கிரு: உருக்மணீ, உன் ஆக்ஞைப்படியே ராக்ஷஸ முறைப்படி உன்னை அபகரித்துச் செல்ல வந்திருக்கிறேன். இனி அதிக நேரம் தாமதிப்பதற்கில்லை. அதோ பலராமண்ணு ரதத்துடன் காத்துக்கொண்டிருக்கிறார். வருவாயா ?

உ-ணி: (சிரித்து,) ராக்ஷஸ விவாஹத்தில் கன்னிகையின் சம்மதத்தையும் பெறுவதுண்டா நாதா ?

கிரு: சாதாரணமாக இல்லை. ஆனால் இது, நாமிருவரும் ஏகோபித்து, ஏற்படுத்திக் கொண்ட ராக்ஷஸ விவாஹ மல்லவா ? இதன் முறையே வேறு.

[அன்புடன் உருக்மணியை அழைத்துச் செல்கிறார். மெதுவாகத் திரை விழுகிறது.]

---

## காட்சி 13.

---

[விதர்ப்பத்தில், அரண்மனையிலோர் அறை. உருக்மியும், பீஷ்மராஜனும் பேசியவண்ண மிருக்கின்றனர்.]

உ-மி: அண்ணு, நாழிகையாயிற்று, புறப்படுங்கள். மணமகள் கௌரி பூஜையை முடித்துக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுவாள்.

பீஷ்: நான் வந்துதானுகவேண்டுமா ? எனக்கோ வயதாகி விட்டது. மனதும் சரியில்லை.

உ-ணி: நன்றுயிருக்கிறது நீங்கள் சொல்வது. சிசுபாலன், மாமன் எங்கே யென்று கேட்டால் என்ன கூறுவது ? அண்ணு, தாமதம் செய்யாமல் வாருங்கள்.

[வெளியில் ஆரவாரம் கேட்கிறது.]

உ-மி : இதென்ன யுத்த பேரிகை முழங்குகிறதே அப்பேர்ப்பட்ட பேராபத்து என்ன நேர்ந்திருக்கக் கூடும்.

[மூன்று போர்வீரர்கள் வருகின்றனர்.]

மு-போ : அரசே !

உ-மி : என்னடா யிது? என்ன விசேஷம்?

இ-போ : என்ன சொல்ரது ? சொல்ரதுக்கும் வாய் வரலே.

உ-மி : அடேய், சீக்கிரம் சொல். ஏன் ஓடி வந்தீர்கள் ?

இ-போ : அடே நீ சொல்லு. நீ தான் சரியா சொல்லுவே.

மூ-போ : ராஜா, எடுத்துக்கினு பூட்டாங்கோ ராஜா, நம்ம— நம்ம— சின்ன— சின்ன ராணியே.

உ-மி : என்ன ? உருக்மணியையா ? யாரடா' எடுத்துச் சென்றது ?

[முதல் போர்வீரன் தோளைப்பிடித்து உலுக்குகிறான்.]

மு-போ : (பயந்து,) கிருஷ்ணன், ப்ரபோ ! கோவிலுக்குள்ளே ராணி போனாளா— அங்கே வந்து திடீரென்னு தூக்கிண்டு ரதத்திலே போய்ட்டார் ப்ரபோ !

உ-மி : நீங்களென்ன செய்தீர்கள் ?

இ-போ : நாங்கள் எதுத்துச் சண்டே போட்டோம். எங்களே ஒரே தள்ளா தள்ளிட்டுப் பூட்டாரு.

உ-மி : உங்கள் குணமறிந்துதான் நான் சைத்ய, மஹேந்திர பலன்களை வரவழைத்தேன். (போர் வீரனைக் கீழே தள்ளுகிறான்.) சிசுபாலனுக்குத் தெரியுமா ? அவன் இதற்குள் அறிந்து போருக்குச் சென்றிருப்பான். கவலை இல்லை.

மூ-போ : சேதி ராஜாவும் அவுங்க சேனையெல்லாம் கூட சண்டே போட்டாங்கோ. அவாளை யெல்லாம் ஒரே அடியா அடிச்சுட்டாரு, கூட வந்தாரே அவரு.

உ-மி : யாரடா, அது கூட வந்தது ?

இ-போ : பெரிய மீசைக் காரரு. பேரு பல-மா-மா.

முபோ : இல்லேடா, பலராமாவாம் ப்ரபோ.

உ-மி : பலராமனு ? அவனும் கூட வந்தானு ? இதோ நானே சென்று அவர்களேத் துரத்திப் பிடித்து, என் சோதரியை கொண்டுவருகிறேன்.

பீஷ் : உருக்மீ, பொறு. ஒரு வேளே உருக்மணியும் சம்மதப்பட்டு, காந்தர்வ முறைப்படி விவாஹம் செய்துகொண்டு சென்றிருக்கலாம். அப்படியாயின்—

உ-மி : இருந்தாலுமென்ன ? கள்ளத்தனமாக ஒரு பெண்ணே அழைத்துச் செல்வதா ? இந்த குற்றத்தைத் தண்டிக்க வேண்டியதுதான்.

பீஷ் : கண்ணனேயா தண்டிப்பது ? சங்கு சக்ர கதா பாணியாய் கோபாலனும், கலப்பையுடன் அவன் சோதரனும் போரில் நின்று விட்டால், அவர்களே வெல்ல யாராலாகும் ? அவர்கள் தீரத்தைப்பற்றி நீ கேட்டிருப்பாயன்ருே ?

உ-மி : எல்லாம், கேட்டிருக்கிறேன். அவர்கள் தீரத்தை, வயோதிகரான தாங்கள்தான் புகழ வேண்டும் ! பாவம் — வாயில்லா கோபாலர்களேயும், இடைச்சேரியிலுள்ள ஸ்திரீகளேயும் மயக்கி வஞ்சிப்பதுபோல் இங்கும் வந்தான் போலும். நான் ஒரு க்ஷத்திரியன், இடையனல்ல. இதோ சற்று பாரும். அவர்கள் இருவர்களேயும், இரு கைகளில் பிடித்து, இழுத்து வருகிறேன். அடேய், எந்தப்பக்கம் போனுர்களவர்கள் ?

மு-போ : துவாரகையை நோக்கிச் சென்ருர்கள்.

உ-மி : இதோ வந்தேன்.

[ விரைந்து, வீரர்களுடன் செல்கிருன். ]

பீஷ் : ஹா ! ஹா !! நாரத முனிவர் கூறியபடி என் மனுேபீஷ்டம் நிறைவேறிவிட்டது. உருக்மிக்கும் நற்மதி வந்து, முக்தி அடைவானென்று சொன்னுரல்லவா ! எதற்கும், நானும் பின்னல் சென்று அனர்த்தங்கள் நேராவண்ணம் பார்க்கிறேன். ஹே ! கோபால கிருஷ்ண ! எல்லாம் உன் மகிமை.

[ போகிருர். ]

---

## காட்சி 14.

[ஒரு வனம். கிருஷ்ணன், பலராமன், உருக்மணி, உத்தவர், தாருகன் வருகின்றனர்.]

கிரு : பிரியே, ஏன் இன்னும் தயங்குகிறாய்?

உ-ணி : நாதா, எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது.

கிரு : சுந்தரி, நான் அருகிலிருக்கும் பொழுது உனக்கேன் பயம்?

உ-ணி : நாதா, என் அண்ணா உருக்மியும், அவர் பரிவாரங்களும், தங்களைப் பின் தொடர்வார்களோ யென்ற திகில் மீறுகிறது.

பல : (கோபித்து,) என்ன, எங்களை அவ்வளவு கேவலமாய் நினைத்து விட்டாயா? உருக்மியல்ல, இந்த உலகமே திரண்டு வந்தாலும் இந்த பலராமன் கலப்பை உன்னைக் காக்குமென்று தைரியமா யிருக்கலாம்.

கிரு : (சிரித்து,) அண்ணா சொல்வதைக் கேட்டாயா உருக்மணி?

உ-ணி : அதற்காக நான் சொல்ல வில்லை நாதா. தங்களை அடைந்த இந்த மங்கள தினத்தில், என் சகோதரனுக்கும், பெற்றோர்க ளுக்கும் கெடுதியுண்டாகுமே யென்று கலங்குகிறது என்மனம். இதற்கு நான் என்செய்வேன்?

கிரு : (பலராமனிடம்) உருக்மி இறப்பானோ என்ற பயமாம் அண்ணா.

பல : அப்படியா? (சாந்த மடைந்து சிரிக்கிறான்.)

கிரு : உருக்மணி, கவலை வேண்டாம். உன்குலத்தோர் யாரையும் இன்று கொல்லமாட்டேன். தைரியமாயிரு. அதோ, அவர் களே வந்து விட்டார்கள்!

உ-மி : (உள்ளிருந்து,) அதோ போகிறார்கள் வாருங்கள்.

[உருக்மியும், வீரர்களும் வருகின்றனர். தாருகன் எதிர்த்துச் செல்ல அவனைப்புறங்கையால் தள்ளிவிட்டு, உருக்மி பாதையை மறைக்கிறான். ஒருவீரன் உத்தவரை முழித்துப்பார்க்கிறான்.]

உ-மி : அடே, என் அருமைச் சோதரியைத் திருடிச் செல்லும் பாதகா, எங்கே ஓடுகிறாய்? நில். உன்நடத்தைக்கு இப்பொழுது காரணம் கூறு?

கிரு : உனக்குக் காரணம் கூறவேண்டுமா?

உ-மி : தகுந்தகாரணங்கள் உரைத்தாலொழிய, வழிவிட முடியாது.

கிரு : (நகைத்து,) அப்படியானால், நாங்களாகவே வழி செய்து கொண்டு போகவேண்டுமா?

உ-மி : என்னுடன் நீ யுத்தம் செய்து பிழைத்த பிறகல்லவா ?

கிரு : (பயந்தவர்போல் நடித்து) அண்ணா இவன் பயமுறுத்துகிறான் என்னை.

பல : கிருஷ்ணா, ஏன் இந்தப்பயலுடன் வீண் தர்க்கம்? விடு வழி, நான் பார்த்துக் கொள்கிறேன். அதோ பார், பாவம், உருக்மணி கவலையுடனிருக்கிறாள். அவளைத் தேற்று, போ. அடே, புழுவே, நில் நேராக யுத்தத்திற்கு.

[பலராமனும், உருக்மியும், ஆயுதங்களை வீசுகிறார்கள். உருக்மணி இருவர்களுக்குமிடையில் வந்து, முழந்தாளிட்டு விழுகிறாள்.]

உ-ணி : நாதா இவர்கள் சண்டையை நிறுத்துமே.

பல : ஆனால் உன் அண்ணனை வழிவிடச் சொல்.

உ-ணி : அண்ணா, உமது தங்கையல்லவா நான்? என் மனதிற்கேற்ற கணவனுடன் நான்வர நீர் கோபிக்கலாமா? வேண்டாம், வேண்டாம்.

உ-மி : உருக்மணி, என்னவார்த்தைகள் கூறினாய்? இந்த அற்பர்கள் செய்கையால் என்னை எல்லோரும் பழிக்கும் படியாய் விட்டதல்லவா? உருக்மணி எங்கே என்றால், என்ன கூறுவது ?

கிரு : (நகைத்து,) இது ஒரு கஷ்டமா ? அவள் கண்ணனை மணந்து துவாரகைக்குப் போய் விட்டாள் என்று சொல்வது.

உ-மி : இல்லை. நானில்லாதவேளை ஓர் திருடன் கள்ளத்தனமாய் எடுத்துச் சென்றான் ; நான் எதிர்த்த பொழுது அவளைக் கொண்டு என் கோபத்தைத் தணிக்கப் பார்த்தான், என்று கூறுவது. சீ,சீ நன்றி கெட்டபதரே.

[உருக்மணியைத் தள்ளுகிறான்.]

: அடே, யாரை யென்னவார்த்தை கூறத்துணிந்தனை ? அப்படிக்கூறிய உன் நாவை இரு கூறாக்குகிறேன் பார். எடு உன் ஆயுதத்தை.

[கிருஷ்ணன் உருக்மணியிடம் ஏதோ கூற, அவள் பூர்வ ஞானமடைகிறாள். இருவரும் மறைகின்றனர்.]

[பலராமனும், உருக்மியும் சண்டையிடுகின்றனர்.]

மி : (சண்டையை நிறுத்தி,) எங்கே அந்தப் பாதகர்கள் ?

[பலராமனும், மற்றவர்களும் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர்,]

அடே கபட, சோர கிருஷ்ணா, உன் மாயாஜாலத்தினால் மறைந்தனையா ? நீ ஒரு ஆணா ? போரில் இருப்பதை விட்டு, பயந்தா ஓடி விட்டாய் ? எங்கிருக்கிறாய் கூறு ? க்ஷத்திரியனானால், உடனே வா என் முன். ஹே கிருஷ்ணா ! (கூவுகிறான்.)

[திடீரென்று கருட வாஹனராய், ஸ்ரீமன் நாரர்யணன், ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் தோன்றுகிறார்.]

ஸ்ரீ-நா : உருக்மீ, ஏன் என்னைக் கூவி அழைத்தாய் ?

[எல்லோரும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, கைகூப்பி அசைவற்று நிற்கின்றனர்.]

உ-மி: ஹா-கண்டேன்! ஹே, கோபாலா, இப்போதல்லவா கண்டேன் உன் நிஜஸ்வரூபத்தை. இதுவரையில் உண்மையை அறியாது, பலவாறு நிந்தித்து அபசாரப்பட்டேன், என்னை மன்னிப்பாய்.

ஹே, கருணா ஸாகரா, முன் கஜேந்திரன், முதலை வாயிலகப்பட்டு பிராணாவஸ்தையில், ஹே முதல்வோனே என்று முறையிட, க்ஷணமதிற் தோன்றி ஆதரித்த ஆதிமூலமே! தீனபந்தோ! பகைவர் பரம்பரையைச் சேர்ந்தவனாகிலும், உன்னைச் சரணாகதி அடைந்தபின், ராஜ்யமும், சிரஞ்ஜீவிப் பட்டமும் விபீஷணனுக்கு அளிக்க வில்லையா?

பகுத்தறிவில்லா மிருகத்தையும், ராக்ஷஸகுல சத்ருவையும் ரக்ஷித்த நீ, உன் ஹிருதயத்தில் வசிக்கும் தேவியின் சோதரனாகிய என்னை, நான் கோபாவேசத்தால் கூறியதை யெல்லாம் நினையாமல், க்ஷமித்துக் காப்பாற்ற வேண்டும். (நமஸ்கரிக்கிறான்.)

[பீஷ்மன், வனஜம், விஜயர் முதலியோர்கள் வருகின்றனர். எல்லோரும் பகவானைத் துதித்துப்பாடுகின்றனர்.]

[திரை விழுகிறது.]

31,2NSU (Q2u)
G8

மங்களம்.

நாடகம் முற்றிற்று.

# RUKMANI — KRISHNA

## STAGED AT

| | | |
|---|---|---|
| **Coimbatore** | .... | *14th April 1934.*<br>(In Aid of the Ladies' Club) |
| **Coimbatore** | .... | *7th September 1934.*<br>(Presided by<br>Major H. G. Howard C.I.E.) |
| **Mettupalayam** | .... | *17th November 1934.*<br>(By Public Request) |
| **Coimbatore** | .... | *2nd February 1935.*<br>(Presided by Sir K. V. Reddi, kt.<br>in aid of D. P. A. S.) |
| **Madras (Mylapore)** | | *28th August 1938.*<br>(in aid of Charities) |

## BY THE SAME AUTHOR

### IN TAMIL

MANMATHA—VIJAYAM :—A very emotional and moral theme from the Skanda-puranam. Written in well balanced and flowing Style.

**Price Annas Eight.**

PERIANNAN'S TEA-PARTY—A Roaring Farce.

**Price Annas Three.**

SUB-MUNSIF'S PROMOTION—A Social Farce.

**Price Annas Three.**

SANTHANAKRISHNAN—A Social Plot. *(Drama)*
(under re-editing)

**Price Annas Eight.**

### IN ENGLISH

BEHIND THE FOOTLIGHTS.—An Instructive and realistic view of current conditions, with constructive suggestions.

**Price Annas Four.**